220

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - JUN 1933
MADRAS

1220

உ

சிவமயம்.

திருக்களர் விளக்கம்.

இஃது

கருப்புக்களர்,

திருவருள். சுப்பைய சுவாமிகள்

மாணுக்கர்களில் ஒருவராகிய,

திருக்களர்

மு. சுவாமிநாத மாதவராயர்

எழுதியது.

திருவாரூர்—விஜயபுரம்

கருணநிதி (பில்டிங்ஸ்) பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1933

Q23:38·2113CR
N33.
178328

முகவுரை.

கடல்புடைசூழ்ந்த நெடுநிலவுலகிலே, ஒண்டமிழெனுந் தண்டமிழ் மண்டலத்திலே, எணாட்டிய புகழ்ச் சோணாட்டிடையிலே, பொன்னிநதி வளஞ்சிறந்த வெண்ணிநதிப் பிரிவிலே, அறந்திறம்பாத புறங்கரம்பை நாட்டிலே பிறந்தோர்க்குப் பிறவாப் பெருவாழ்வளிக்கும் பெரும்பதியாயும்; இறந்தோர்க்கு இறவாப் பெருவாழ்வளிக்கும் இன்பக் களஞ்சியமாயும்; தரிசித்தோர்க்குத் தனிப்பெரும் பேறளிக்குந் தவப்பெரும்பதியாயும்; நினைத்தோர்க்கு சீனெறிப் பெரும்பேறளிக்கும் நீள்பெரும்பதியாயும் விளங்காநின்ற, மருக்கிளர் பொழில்சூழ் திருக்களரென்னுந் திவ்விய சிவக்ஷேத்திரத்தில் என்னுடைய வாழ்நாளிலே யான் நேரிற் கண்டனவெல்லாம் ஆயிரஞ் சிரமும் இரண்டாயிரம் நாவுமுடைய ஆதிசேடனாலும் அளவிடற்கரியதாகும். என் சிற்றறிவிற் கெட்டிய ஒரு சிறுபகுதியைச் சிறு புத்தகமாக்கித், **திருக்களர் விளக்கம்** என்று பெயரிட்டு வெளியிட்டுளேன். குற்றமிருப்பினுங் குணமெனக் கொள்வார்களாக.

தி. மு. சு.

உ

சிவமயம்.

திருக்களர் விளக்கம்.

(923.53:213C N3)

காப்பு.

"அத்தி முகனடி நித்த நினைபவர்
சித்தி திருவொடு முத்தி பெறுவரே"

"உற்பவந் தொலைந்திட ஒருபொருள் தோன்றிடக்
கற்பகக் களிற்றையே கருத்து ளிருத்துவாம்"

"எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்"

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொ னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணுடு"

திருச்சிற்றம்பலம்.

அநாதிமலமுத்தராய், நித்தியராய், வியாபகராய், எல்லாவறிவும், எல்லா முதன்மையும், எல்லாவநுக்கிரகமுமுடையராய்; ஆன்மாக்களிடத்தே பதிந்த கைம்மாறற்ற பெருங்கருணையினாலே, ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையுஞ் செய்யாமற் செய்கின்றவராய்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றின்வாயிலாகத் தம்மை அடைய விரும்பும் திருத்தொண்டர்களுடைய பக்குவாபக்குவத்துக்குத் தக்கபடி சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதங்களை யளித்தாள்பவராய்; தன்வயத்தனாதல்,

தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குணமுடையராய் விளங்கும் நமது கடவுள் திருக்கோயில்கொண்டு விளங்காநின்ற சிவதலங்கள் பலவற்றுள்ளுஞ் சிறந்த 'திருக்களர்' என்னும் சிவதலமானது, சோழமண்டலத்தின் ஒரு பகுதியாகிய மேற்கே உலகுய்யக்கொண்டவளநாட்டையும், வடக்கே நென்மலிநாட்டையும், கிழக்கே இடையளநாட்டையும், தெற்கே கடலையும் எல்லைகளாகக்கொண்ட புறங்கரம்பை நாட்டினிடையில் 'களப்பாள்' என்னும் களந்தை நகரத்தை உண்டுபண்ணி அதனை இராசதானியாகக்கொண்டு அந்நாட்டையாண்ட பெரிய போர்க்களத்தையுடைய சிறந்த போர்வீரனாய் விளங்கிய "**களபன்**" என்னும் குறுநிலமன்னன் சோழனோடு பெரும்போர் செய்து, அவனுடைய திருமுடியைப் பிடுங்கிக்கொண்டு, திருத்தில்லையை அடைந்து, தில்லைவாழந்தணர்களிடத்தில் முடியைக்கொடுத்து, தனக்குச் சூட்டச்சொல்ல, அத்தில்லைவாழந்தணர்கள், நாங்கள் சோழகுலத்தாருக்கன்றி ஏனையோருக்கு முடிசூட்டோமென்று மறுத்து, முடியை இருத்திக்கொண்டு வேற்றூருக்குச் சென்றனர். "களபமகாராசன்" அடங்காத் துயரமுடையனாய் சபாநாயகப்பெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு நித்திரைசெய்தனன். சபாநாயகப்பெருமான் அவ்வரசனுடைய கனவிற்றோன்றி, தமது திருவடியை முடியாகச் சூட்டியருளினார். களப மகாராசன் சபாநாயகப்பெருமானுடைய திருவடியையே முடியாகக்கொண்டு உலகினைப் பல கூற்றங்களாகப் பிரித்து அரசுபுரிந்தனன்.

"நாதன் திருவடியே முடியாகச் சூடி நல்ல
போதங் கருத்திற் பொறித்தமை யாலது கைகொடுப்ப
ஓதந்தழுவிய ஞாலமெல் லாமொரு கோவில் வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள னாகிய கூற்றுவனே"

(திருத்தொண்டர் திருவந்தாதி)

"குன்றாத புகழாளர் களந்தை வேந்தர்
கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டு சூடப்
பொன்றாழ் முடிவேண்டப் புலியூர் வாழும்
பூசுரர்கள் கொடாதகலப் புனித னீந்த
மன்றாடுந் திருவடியே முடியாச் சூடி
மாநிலங்காத் திறைவனுறை மாடக் கோயிற்
சென்றாசை யுடன்வணங்கிப் பணிகள் செய்து
திருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே"

(திருத்தொண்டர் புராணசாரம்)

அவ்வரசன், தான் திருத்தில்லையை யடைந்து சபாநாயகப்பெருமானுடைய திருவருளைப்பெற்றதற் கறிகுறியாக அழகும் இலக்குமிகடாட்சமும் பொருந்தியதென்பதற்கு "திரு" என்னும் பதத்தையும், தன்னால் உண்டுபண்ணிய தென்பதற்கு "களர்" என்னும் பதத்தையும் ஒன்றுசேர்த்து "திருக்களர்" என்று பெயரிட்டு, சபாநாயகப்பெருமானுக்கு அழகிய சிற்சபையும், சுவாமிக்கும் தேவியாருக்கும் திருக்கோயில்களும் அமைத்து, சபாநாயகப் பெருமானுக்கு ஆநந்தத்தாண்டவர் எனவும், சுவாமிக்கு அடைந்தார்க்கருள்செய்த நாயனார், களரிளமுளையீசுரர் எனவும், தேவியாருக்கு அழகேசுரி, இளங்கொம்பன்னாள் எனவும் பெயரிட்டுப் பூசித்தனன். கல்வெட்டில், அடைந்தார்க்கருள்செய்த நாயனார் என்றிருக்கிறது. தேவாரம், "அடைந்தார்க்கருளாயே" என்றுகூறுகிறது. அடங்கன்முறை, சிவதலமான்மியச்சுருக்கம், சிவக்ஷேத்திரவிளக்கம், சிவதலமஞ்சரி, சிவதலயாத்திரானுகூலம் என்பவற்றுள் களரிளமுளையீசுரர் எனவும், இளங்கொம்பன்னாள், அழகேசுரி எனவுங் காணப்படுகின்றன. களபமகாராசன் களப்பாள் என்னும் களந்தையை இராசதானியாகக்கொண்ட காரணத்தினால் களப்பாளி, களப்பாவுடையன், களந்தையாண்டான் எனவும், பெரிய போர்க்களமுடையனாதல்பற்றி இருங்களன் எனவும், உலகினைப் பல கூற்றங்களாகப் பிரித்தகாரணத்தினால் கூற்றுவன் எனவும் பெயர்பெற்றான். சபாநாயகப்பெருமானை

அன்போடு வழிபட்டு, அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவனாய் கூற்றுவநாயனாரென ஆடி மாசம் திருவாதிரை நட்சத்திரத்தில் சிவசொரூபம் பெற்றான்.

தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் இருவரும், திருவீழிமிழலையினின்று புறப்பட்டுத் திருவாரூர் முதலிய சிவதலங்களை வணங்கிக்கொண்டு, இத்தலத்தையடைந்து வணங்கித் தேவாரத்திருப்பதிகங்கள் பாடித் தரிசனஞ்செய்துகொண்டு திருமறைக் காட்டுக்குச் சென்றார்கள். பின்பு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாண்டிநாட்டை நீங்கி இத்தலத்தையடைந்து தேவாரத் திருப்பதிகம் பாடித்தரிசனஞ்செய்துகொண்டு திருக்கொள்ளம்பூதூருக்குச் சென்றார். (இவற்றைப்பெரிய புராணத்திற்காணலாம்) திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்திருப்பதிகங்களுள் பண்-சீகாமரம் என்னும் ஒரு பதிகமாத்திர மிருக்கிறது. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்கள் மறைந்துவிட்டன. க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் அறாம்பாடலில் "கண்ணை களர்க் காறை கழிப்பாலையுங் கயிலாயநாதனையே காணலாமே" என்று அருளிச்செய்யப் பட்டிருக்கிறது.

தலபுராணம்.

இதில் "அனுகூலச்சருக்கம், பாரிசாதவனச்சருக்கம், நிருத்தச்சருக்கம், பஞ்சாக்கரச்சருக்கம், மாலாதாரகச் சருக்கம், மகாரதன் புத்திரப்பேற்றுச்சருக்கம், தீர்த்த மான்மியச்சருக்கம்" என்னும் ஏழு சருக்கங்களிருக்கின்றன. துருவாசமுனிவர் பூசித்து சித்திரை மாசம் மிருகசிர நட்சத்திரத்தில கொடியேற்றி, அத்த நட்சத்திரத்தில் மகாரதமும் சித்திரை நட்சத்திரத்தில் தீர்த்தமுமாக பத்து நாள் திருவிழா நடாத்தி, மாசிமாதம் பூரணையில்

திருநடன தரிசனமும், மார்கழி மாசம் சுக்கில பட்சம் சஷ்டியும் சதைய நட்சத்திரமுங்கூடிய தினத்தில் அறுமுகக்கடவுளிடத்தில் இருபத்தைந்து விதம் பஞ்சாக்கர உபதேசமும் பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

"சித்திரை மதியில் வளர்பிறைத் திதியின்
மான்றலை நாளொனுந் தினத்தி
னுத்தம வமையத் தங்குரார்ப் பணபூ
ருவமுத லாப்புரிந் துவப்பாய்
முத்தல மதிக்கு நான்மறை முழங்கத்
தேவதந் துமிமுறை முழங்க
வெத்தரா தலமும் புகழ்தரு வனேசற்
கெழில்பெற விடைக்கொடி யேற்றி"
(பாரிசாதவனச்சருக்கம்)

"கும்பமா மதியில் வைகும் பூரணைத் திதியிற் கோமா
னம்பிகை யோடு மிப்பே ரம்பலத் தாடன் மேவு
நம்புமத் தினத்தின் மாலைப் பொழுதினி னயந்து சேவித்
தெம்பெரு மானைப் போற்றில் விசேடமென் றியம்ப லாமால்"

"பதமிகுந் தனுமா தத்திற் சுக்கில பக்கத் தாறுந்
திதிபுனற் கிறைநாள் கூடிற் கதியரு டினம தாகும்
வதியுமத் தினத்தின் மேவுங் குகனெழுத் தைந்தும் வாய்த்த
விதியினு னுங்கட் கெல்லாம் விரித்துப தேசஞ் செய்வான்"
(திருத்தச்சருக்கம்)

மாலாதாரகன் என்னும் அரசன் முத்திபெற்றதாயும், மகாரதபாண்டியன் என்னும் அரசன் புத்திரப்பேறுபெற்றதாயும் சொல்லப்பட்டிருக்கின்றன. துருவாசதீர்த்தம், பிரமதீர்த்தம், உருத்திரதீர்த்தம், திருஞானதீர்த்தம் என்னும் நான்கு தீர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. துருவாசதீர்த்தம் சந்நிதியிலிருக்கிறது. பிரமதீர்த்தம் கோவிலுக்கும் தெற்குவீதிக்கும் இடையிலிருக்கிறது. உருத்திரதீர்த்தம் கோவிலுக்கும் மேலவீதிக்கும் மத்தியிலிருக்கிறது.

திருஞானதீர்த்தம் கோவிலுக்கும் வடக்குவீதிக்கும் நடுவிலிருக்கிறது. திருவாரூரில் பிறந்தும், காசியி லிறந்தும், திருச்சிற்றபலத்தைத் தரிசித்தும், திருவண்ணமலையை நினைத்தும் முத்தியடைவர். திருக்களரில் பிறந்தவர்களும் திருக்களரில் இறந்தவர்களும், திருக்களரைத்தரிசித்தவர்களும், திருக்களரை நினைத்தவர்களும், திருக்களரை அறியாமல் தரிசித்தவர்களும், திருக்களரைத் தரிசித்த மிருகங்கள் பறவைகள் புழுப்பூச்சிகள் என்பவைகளும் முத்தியடைவார்கள் என்று உறுதிமொழி கூறப்பட்டிருக்கிறது.

விருத்தங்கள்.

"கமலையிற் பிறந்து மேலாங் காசியி லிறந்துங் கண்ணு
லமைவுறு பசம்பொற் றில்லை யம்பலங் கண்டு மன்பாய்
விமலன்வா ழருணை நாளு முன்னியும் வீடு காண்பார்
சமைதிருக் களருள் யாதொன் றியற்றினு முத்தி சார்வார்"

"சிறந்ததரு வனமோங்குந் தேவர் போற்றுந்
திருக்களர்மா நகர்மேவுஞ் சிவனை யோர்கா
லறிந்துதரி சித்தனரா யினும்யா தொன்று
மறியாமற் றரிசித்தா ரெனினு மன்னோர்
செறிந்தகிளை யொடுமவர்தம் வழியு ளாய
தென்புலத்தோ ரொடுமுறையிற் சிவலோ கத்தி
லுறைந்திடுவர் சத்தியஞ்சத் தியமா மிந்த
வுரைதவறென் றோர்நரகத் துறுவ ராமால்"

"புலையரொடு பொல்லாத பதித ரேனும்
பொன்னவிர்பூந் தருவனத்திற் பொருந்துஞ் செங்கே
ழிலகுமணிப் பெருங்கோயில் வைகு முக்க
ணீசனைத்து ரத்தணுகி யிறைஞ்சி னுரேற்
குலவுவர்முத் தியிலிதுசத் தியமாந் தீராக்
கொடியவினைப் பாவிகளுங் கோவு மாவு
மொலிகொள்பற வையுமளியும் புழுவு மேனுந்
தரிசித்தாற் சிவலோகத் துறையு மாதோ"

'அநந்தமா யிரகோடிப் பிறவியிற்புண்
ணியம்புரிந்தார்க் கல்லா லீசன்
கனிந்துகா தலித்துருகு மிந்தமுழு
மணிச்சபையின் காட்சி யெய்தா

மணந்தனு னினைப்பினுமேற் கதியளிக்கு
    மிச்சபையின் மகிமை யாவும்
புனைந்துநா ருயிரமா முகமெனினு
    மனந்தனுக்கும் புகலொ ணாதால்" (திருத்தச்சருக்கம்)

"சுவாமிபெயர் பாரிசாதவனேசுரர்" "தேவியார் பெயர் அமுதவல்லி" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிலாசாதனம்.

(கல்வெட்டு) "குலோத்துங்கசோழன், இராசராச சோழன், இராசேந்திரசோழன், குலசேகரதேவன், வல்லப தேவன், வீரவிருப்பண்ணவுடையான், வீரபூபதியுடையான், விருப்பண்ணவுடையான் என்னும் அரசர்கள் காலத்தில் கல்லில் வெட்டியுள்ள சிலாசாதனங்கள் பன்னிரண்டு இருந்தன. அவற்றுள் திருக்களர், வேங்கூர், திருச்சிற்றம்பல நல்லூர் (சிலத்தநல்லூர்), பெரும்பலமருதூர் (பெருவடமருதூர்), பஞ்சநதவாணநல்லூர் (சந்தனநல்லூர்), பண்ணியூர், பரம்பைக்குடி (கரம்பைக்குடி), பள்ளிச்சந்தம், செல்வப் பிள்ளையார் கோட்டகம் (செல்லப்பிள்ளையார் கோட்டகம்), தானவநாட்டுக்கண்டியூர், என்னும் கிராமங்களில் சுமார் 300 வேலி நிலமிருந்ததாகத் தெரியவருகிறது.

செப்பேட்டுச்சாதனம்.

(செப்புப்பட்டயம்) "மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன்முடித்தலையுங் கொண்டருளிய குலோத்துங்க சோழன், குலோத்துங்கசோழன், இராசராசசோழன், கடாரங்கொண்ட இராசேந்திரசோழன் என்னும் அரசர்கள் காலத்தில் செப்பேட்டில் வெட்டியுள்ள செப்புச்சாதனங்கள் ஐந்து இருந்தன. அவற்றுள் திருக்களர்முளைத்த நாயனுருக்குச்சாத்துகிற திருக்கோளகை (க) பதினறு பொற்பூ அடங்கிய திருவொதாரமாலை (க), திருவுத்தரியம் (க), திருப்பிறை (க), கன்னபுட்பம் (ந), திருப்பட்டிகைப்பலகை (க), பொற்பூ (க). திருப்பட்டம் (க), திருவாசிகை (க), அபிஷேகம் (முழுக்கவசம்) (க), திருவாரம் (க), திருத்தோடு (உ), திருவாசிகைமத்தியில் சாத்துகிற பாம்பு (க),

தேவியாருக்குச்சாத்துகிற அபிஷேகம் (முழுக்கவசம்) (க), திருவாரம் (க), தோடு (உ), இருபத்து நான்கு வட்டமணிக்கோர்வை (க); முப்பது வட்டமணிக்கோர்வை (க), தனித்தனி நாற்பது வட்டமணிகோர்த்தவடம் (உ). திருச்சிலம்பு (உ), நிறைதவஞ்செய்த நாச்சியார் (தனியம்மனு)க்குச்சாத்துகிற அபிஷேகம் (முழுக்கவசம்) (க), நெற்றித்திரணை (க), திருமங்கலநாண் சமதாலி (க), நாற்பத்தொருமணிகோர்த்த திருத்தாழ்வடம் (க), திருக்கைச்சரி (வளையல்) (ச), வெள்ளிமணி முப்பத்தைந்து கோர்த்த திருத்தாழ்வடம் (க), வெள்ளிக்காறையில்கோர்த்ததாலி (க), திருத்தோடு (உ), திருவாரம் (க), சிரச்சக்கரம் (க), திருக்கண்டாவளி (உ), திருவுத்தரியம் (க), திருப்பள்ளியறை நாச்சியாருக்குச் சாத்துகிற கொக்குவாய்வைத்த வெள்ளிக்காறையில்கோர்த்த சிவதாலிசமமணி (க) என்னும் சுமார் இலட்சம் பொன் பெறுமானமுள்ள தங்கத்திருவாபரணங்க ளிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும் சந்திரசூரியருள்ளளவும் திருவிளக்கெரிக்கைக்கு வட்டிக்குக்காசு உசுரு-ம், அமாவாசியைதோறும் சுவாமி எழுந்தருளப் பண்ணுகைக்கு கலம் ஒன்றுக்கு மூன்று மரக்கால் வாசிக்கு நெற்கலம் கஅ௦-ம் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகின்றன.

கோவிலின் நிலைமை.

1879-ம் வருஷத்தில் சர்வே நடந்த காலத்தில் திருக்களரில் ஏகர் 118 செண்டு 48-ம், குமாரமங்கலத்தில் ஏகர் 53 செண்டு 33-ம், குறுக்கையில் ஏகர் 7-ம், வேழக்கா நல்லூரில் செண்டு 20-ம், சீலத்தநல்லூரில் செண்டு 24-ம் ஆக ஏகர் 179 செண்டு 25 நிலம் மாத்திர மிருந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் பஞ்சாயத்தாராகவிருந்த வீரராகவ கண்டியாரவர்கள் கோவிலுக்கு ஏற்பட்டிருந்த "குருக்கள் (க), பரிசாரகம் (க), அறைதிருமாலை (க), பெரிய மேளம் சதை (க), சின்னமேளம் சதை (க), சங்கு தம்பட்டம் (க), உடல் (க), கிடுகொட்டி (க), திருச்சின்னம் ெ சயசண்டி (க), திருவிளக்கு (க), மெய்காவல் (க), கூட்டல்

பத்துத்தேய்த்தல் (க)," என்னும் அசாமிகளைக்கொண்டு தினம் ஐந்து காலப்பூசை, பிரமோற்சவம் நீங்கலாக மற்றைய சில்லரை உத்ஸவங்கள் முதலிய எல்லாவற்றையும் காலா காலத்தில் மந்திரலோபம், கிரியாலோபமன்னியில் சோடச உபசாரத்தோடு நடத்திவந்தார். அக்காலத்தில் தேவஸ்தானம் இன்ஸ்பெக்டராயிருந்த "தாதாராயர்" என்பவர், மேற்படி வீரராகவ கண்டியர் கோவில் பணத்தில் ரூ. 1-11-0 அபகரித்துக்கொண்டதுபோலக் கமிட்டி ஆபீசுக்கு ரிப்போர்ட்டு செய்து, கோவிலை அவரிடத்திலிருந்து பிடுங்கி கோட்டூர் சடகோபமுதலியாரவர்கள் வகையறுப்பேர்களிடத்தில் ஒப்புவித்தார். மேற்படி சடகோபமுதலியாரவர்கள் வகையறுப்பேர்கள் 1884-ம் வருஷத்தில் திருப்பணி செய்யப் போவதாக சில்லரை உத்ஸவங்களையும், தினம் மூன்று காலப்பூசைகளையும் நிறுத்தி, காலையில் ஒருகாலமும் மாலையில் ஒருகாலமும் மணியடிக்கச்செய்து, தூபியைப் பிடுங்கி எறிந்துவிட்டு, கோவிலையிடித்துப் போட்டுவிட்டு, கோவில் பணத்தில் ரூ. 6000, (ஆறாயிர) த்தைக்கையில் வைத்துக்கொண்டு, பஞ்சாயத்தை இராசிநாமா கொடுத்து விட்டார்கள். திருக்களரிலிருக்கும் பஞ்சநதம் பிள்ளை என்பவர் கமிட்டி ஆபீஸுக்கு எழுதிய மனுவின்பேரில் திருக்களர்க் கோட்டகத்தில் பன்னிரண்டு வேலி நிலத்தின் பேரில் மேற்படி ரூ. 6000, (ஆறாயிர)த்துக்கும் பெந்தகம் எழுதிவாங்கப்பட்டது. பின்பு கமிட்டி ஆபீஸிலிருந்து இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ண ஐயர் வந்து, சிலகாலம் கோவிலைப்பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தார். அதன் பின்பு கருப்பட்டிமூலை தியாகராசசுவாமி உடையாரவர்களை பஞ்சாயத்தாராக நியமித்து, கமிட்டி மெம்பர்களிலொருவரா யிருந்த தண்ணீர்க்குன்றம் சிங்காரவேலுடையாரவர்கள் கோவிலைத் தம்முடைய விசாரணையில் வைத்துக்கொண்டு, பரிபாலனஞ்செய்துவந்தார். கோவிலை "ஆல், அரசு, அத்தி, இத்தி, எருக்கு, முருக்கு, கள்ளி, முள்ளி, காறை, சூறை நுணா, இண்டு, ஆதொண்டை, நெரிஞ்சி, குருஞ்சா, புல் பூண்டு, செடி, கொடி" முதலிய யாவும் ஒன்றுசூழ்ந்து

விழுங்கிவிட்டன. 'மாதயபட்டினம்' என்னும் திருநகரத்தை யுண்டுபண்ணி அதனை இராசதானியாகக்கொண்ட காரணத்தினால் "மாதயாண்டான், மாதராயன், மாதவ ராயன்" என்னும் பட்டமெய்திய மாதவசோழன் மரபில் திருக்களரில் தோன்றிய மு. சுவாமிநாத உபாத்தியாயர் என்பவர் மேற்படி கோவிலை நல்லநிலைமைக்குக் கொண்டு வரக்கருதி 1898-ம் வருஷம் முதல் 1906-ம் வருஷம் வரை யில் விடாமுயற்சியோடு அக்காலத்தில் தஞ்சாவூர் சர்க்கிள் தேவஸ்தானக்கமிட்டியில் மெம்பர்களாயிருந்த, தஞ்சாவூர் K. கலியாணசுந்தரமையர் (வக்கீல்) அவர்கள் (1), மேற்படியூர் சாம்பமூர்த்திராயரவர்கள் (2), பூண்டி V. அப்பாசாமி வாண்டையாரவர்கள் (3), அரையூர் வெங்கட்டராம உடையாரவர்கள் (4), தண்ணீர்க்குன்றம் சிங்காரவேலுடையாரவர்கள் (5), கோட்டூர் K. திருவேங்கட முதலியாரவர்கள் (6) இந்த ஆறு மெம்பர்களையும், அறுமுகக் கடவுளின் ஆறுமுகங்களையும், தனித்தனி தோத்திரஞ் செய்பவன்போல பல்லாயிரம் "மகஜர், மனுக்கள்" தனித்தனி எழுதியும், சேர்த்தெழுதியும் தோத்திரம் பண்ணினார்; "நீலலோசனி, யதார்த்தவசனி, ஜனானுகூலன்" முதலிய பத்திரிகைகளின் வாயிலாகக் கதறினார்; "தேவாரத்திருப்பதி கம், தலபுராணம், பல்லாயிரந் துண்டுப் பத்திரிகைகள்" முதலியவற்றை பல கனதனவான்களுடைய பேருதவியைக் கொண்டு அச்சியற்றிக்கொண்டுபோய் தேவகோட்டை, காரைக்குடி, கானாடுகாத்தான், நியமத்தான்பட்டி, பள்ளத்தூர், கோட்டையூர், கடியாப்பட்டி, இராயபுரம், அரிமளம், தேனிப்பட்டி, கொத்தமங்கலம், அழகாபுரி, கண்டனூர், புதுவயல், அமராபதிபுதூர், கல்லுப்பட்டி, கல்லல், நாட்டரசன்கோட்டை, பாகனேரி, ஒக்கூர், கீழப்பூங்குடி, மதகுப்பட்டி, கண்டர்மாணிக்கம், ஆத்தங்குடி, கீழைச்சிவல்பட்டி, மேலைச்சிவல்பட்டி, பலவான்குடி, மகிபாலன்பட்டி, சிறுவயல், ஆறூன்வயல், முதலிய (தொண்ணூற்றாறு தத்துவம்போல் விளங்காநின்ற) தொண்ணூற்றாறு நகரங்களிலும் (சோழநாட்டுக்குத் தலைநகராய்

விளங்கிய புகார்ப்பட்டினத்தை கரிகாற்பெருவளவன் காலத்தில் விட்டுநீங்கிவந்து வசிக்காநின்ற (சிவநேசச் செல்வனாகிய குபேரனைப்போன்ற) சிவநேசச்செல்வர்களாகிய (பிள்ளையார்பட்டி, வைரவன்பட்டி, இருப்பைக்குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, வேலன்குடி, இரணியூர், மாத்தூர், நியமம் என்னும் ஒன்பது திருக்கோயிலின்கண் திருவுருக்கொண்டு விளங்கும் சிவபெருமானை வழிபடு கடவுளாகக்கொண்ட) நகரவணிகக் கனதனவான்களிடங் கொடுத்து, தெருக்கள்தோறு நின்று உபந்நியாசஞ்செய்து அலறினர். முற்காலத்தில் கல்லாலமரத்தடியில் தெற்குமுகமாக எழுந்தருளியிருந்து "சனகர், சனந்தனர், சனாதரர், சனற்குமாரர்" என்னும் நால்வர்க்கருள்புரிந்தும்; பிற்காலத்தில் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் எழுந்தருளியிருந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அனுக்கிரகஞ்செய்தும்; இக்காலத்தில் கழனிவாயில் கோயிலூரில் வன்னிமரத்தடியில் ஸ்ரீமத் முத்துராமலிங்க ஞானதேசிக சுவாமிகள் பரம்பரையில் ஐந்தாங் குருமூர்த்தியாயும் விளங்கிய ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளுடைய திருச்சந்நிதானத்தில் வணங்கிநின்று விண்ணப்பஞ்செய்தார். காரைக்குடி பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியாரவர்கள், ஆத. லெ. ஆத. ஆதப்பசெட்டியாரவர்கள், மா. பழ. முரு. சுப்பிரமணிய செட்டியாரவர்கள், ஆத. பழ. பழனியப்பசெட்டியாரவர்கள் முதலிய ஒன்பது பங்காளிகள் ஒன்றுகூடி இலட்ச ரூபாய்க்குத் திருப்பணிசெய்வதாய் வாக்களித்தார்கள். இந்த நிலைமையில் கமிட்டியாரவர்கள் மேற்கண்ட சிங்காரவேலுடையாரவர்கள் அபிப்பிராயப்படி ஒரிச்சேரி கோவிந்தசாமி உடையாரவர்களையும், தண்டலையடைந்த கேடி நாராயண ஐயங்கார் என்பவரையும், பஞ்சாயத்தார்களாக நியமித்து விட்டார்கள். மேற்படி சுவாமிநாத உபாத்தியாயர் மேற்கண்டசெட்டிப்பிள்ளைகளையும்; பூவனூர் இராசு முதலியாரவர்கள், ஆலங்காடு சிதம்பர செட்டியாரவர்கள் என்பவர்களையும், பஞ்சாயத்தார்களாக நியமிக்கவேண்டுமெனவும்,

மற்றையோர்களை பஞ்சாயத்தார்களாக நியமிக்கக்கூடா தெனவும் எண்ணிறந்த மகஜர் மனுக்கள் எழுதினர். கோவில் ஏஜண்டு வைத்திநாதய்யருக்கு தண்ணீர்க்குன்றம், கருப்பட்டிமூலை என்பவற்றிலிருந்துவரும், கோவிலுக்கு விரோதமான கடிதங்களையெல்லாம் மேற்படி வைத்திநாதய்ய ருடைய ஆசைநாயகியாகிய "மீனாட்சியம்மாள்" என்பவளைக் கொண்டு கைப்பற்றி மேற்கண்ட பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டுவந்தார். இந்த நிலைமையில் P. R. நடேசய்யரவர் கள் கமிட்டியில் பிரஸிடெண்டுபதவி வகித்ததைக் கேள்விப் பட்டு, அவருடைய திருவடிகளில் போய்விழுந்து, இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு, மனதிலிருந்த குறைகளை யெல்லாஞ் சொல்லி அலறி அழுதார். மேற்படி P. R. நடேசய்யரவர்கள், V. அப்பாசாமி வாண்டையா ரவர்கள், K. திருவேங்கட முதலியாரவர்கள், சாம்பமூர்த்திராயரவர்கள் இந் நான்கு மகானுபவர்களும் ஒன்றுகூடி (எழுபது திருப்பெருங் கோயிற்கட்டிய கோச்செங்கட்சோழநாயனாரையும், இருபத்து நான்கு திருக்கோயிற்கட்டிய ஐயடிகள் காடவர் கோனாயனாரையும் ஒப்பவராகிய) மேற்படி பூவனூர் இராசு முதலியாரவர்களைப் பஞ்சாயத்தாராக நியமித்தார்கள். பின்பு சில நாட்சென்று மேற்படி இராசு முதலியா ரவர்களுக்கு உதவியாக களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்களையும் பஞ்சாயத்தாராக நியமித்தார்கள்.

திருப்பணி.

சுவாமிமலை கும்பாபிஷேகத்தில், மேற்படி ஸ்ரீமத் வீரசேகரஞானதேசிக சுவாமிகளை, மேற்படி இராசுமுதலியா ரவர்கள் தரிசனஞ்செய்து, திருக்களர்ப் பெருமை சிறுமை களை யெல்லாம் வாசாமகோசரமாய் விண்ணப்பஞ்செய்தார். அம் மகாமூர்த்திகள் சோழமண்டலத்திலே தேவாரத்திருப் பதிகம்பெற்ற சிவதலமொன்று திருப்பணி செய்யக்கருதி யிருப்பதாயும், திருவுளச்சம்மதப்படி முடியுமெனவும் திருவாய்மொழிந்தருளிக் கோவிலூருக் கெழுந்தருளிச்

சிலநாட் சென்றபின், திருத்தொண்டர் திருக்குழாஞ் சூழ திருக்களருக் கெழுந்தருளி, மேற்கண்ட திருவேங்கட முதலியாரவர்கள், இராசு முதலியாரவர்கள், இரங்கசாமி முதலியாரவர்கள் முன்னிலையாக ரூ. 300000, (மூன்று லட்சம்) செலவிட்டுக் காட்டைக் களைந்து, வசந்தமண்டபத்தைப் புதுக்கி, அம்மண்டபத்துள் மூர்த்திகளையெல்லாம் பாலத்தாபனஞ்செய்து, தினம்நாலுகாலம் பூசையேற்படுத்தி, சிவலிங்கப்பெருமானுடைய 'கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், சபாமண்டபம், சோபனமண்டபம்' தேவியாருடைய "கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம்" இரு சந்நிதிக்கும் பொதுவாயிருந்த 'சொக்கட்டான் மண்டபம்' சபாநாயகப் பெருமானுடைய 'சிற்சபை மகாமண்டபம், தரிசனமண்டபம்', வைரவருடையமண்டபம், மடைப்பள்ளி, யாகசாலை, சிறிய கோபுரம், சிறிய மதில்கள், விநாயகராலயம், நந்திமண்டபம், துசத்தம்பமேடை, பலிபீடமேடை முதலியவற்றை யிடித்து, சிவலிங்கப்பெருமானுக்கு 'கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், திருமாளப்பத்தி மகாமண்டபம், அணிவெட்டுக்கான்மண்டபம், சிறிய கோபுரம்' 'தேவியாருக்கு கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், பள்ளியறை மூடுபிரகாரம், சித்திரமண்டபம், சிறிய கோபுரம்' 'சிற்சபை, யாகசாலை, மடைப்பள்ளி, பதினாறுகான்மண்டபம், சிறியமதில், வாகனமண்டபம்' முதலியன அமைத்து; 'பெரியகோபுரம், பெரிய மதில்' என்பவற்றில் முளைத்திருந்த 'மரங்கள், செடிகள், கொடிகள் முதலியவற்றை வேரோடு களைந்து, சரிந்த பாகங்களைக் கட்டிப் புதுப்பித்து; சந்திரசேகரர், பள்ளியறைச் சொக்கர், துருவாசர் என்பனவாகிய தாமிரமூர்த்திகள்; நவக்கிரகங்கள், நாயன்மார்கள், துவாரபாலகர்கள், துவாரசத்திகள், சண்டேசுரி, இலக்குமி, வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணியர் முதலிய சிலாமூர்த்திகள்; தங்கக்கிரீடங்கள், தங்கக்கவசங்கள், வெள்ளிக்கிரீடங்கள், வெள்ளிக்கவசங்கள், வெள்ளிநாகாபரணக்குவளை, இரத்தினப்பதக்கங்கள், இரத்தின மகரிகள், இரத்தினமாலை, இரத்தினத்தாலி முதலிய

திருவாபரணங்கள்; தீவட்டிகள், புதிவிகள், தடிகள், மடல், கிண்ணம், குடம், கெண்டி, அபிஷேககலயம், தாம்பாளம், குத்துவிளக்கு, சந்தனப்பேலா, பன்னீர்ச்சொம்பு, ஆலவட்டம், தூபக்கால், தீபக்கால், அலங்கார தீபக்கால், இடபதீபக்கால், கஜதீபக்கால், வியாக்கிரதீபக்கால், சிங்க தீபக்கால், நாகதீபக்கால், நட்சத்திரதீபக்கால், கும்பதீபக் குடம், பஞ்சதீப தாம்பாளங்கள், கண்ணாடி, குடை, சாமரம், விசிறி, சுருட்டி, கருப்பூர தாம்பாளம், ஏழுகிளைகருப்பூர தீபக்கால் முதலிய வெள்ளிச்சாமான்கள்; மேற்படி பித்தளை சாமான்கள், திருவாசிகைகள், பலவகைவிளக்குகள், பலவகை மணிகள், எடுபிடிசாமான்கள், துஜத்தம்பம், ஐந்துபவளக்கால் படிச்சட்டவிமானம், சந்திரப்பிரபை, சூரியப்பிரபை; பூதன், பூதகி; நந்தி, அன்னம்; இரண்டு வெள்ளியிடபங்கள், பெருச்சாளி, மயில், யானை, பல்லக்கு; கற்பகவிருட்சம், காமதேனு, கைலாசபர்வதம், குதிரை, ஐந்து மகாரதங்கள், பிரதோஷஇடபம் முதலிய வாகனாதிகள்; சமையற்பாத்திரங்கள் முதலியன செய்வித்து; நான்கு வீதிக்குட்பட்டிருந்த காட்டைக்களைந்து, வீதிக்கொழுங்கீனமாகவிருந்த வீடுகளை யிடித்து, நான்கு தீர்த்தங்களையும் வெட்டி, நன்செய், ஓடை, குட்டை முதலியவைகளைத் தூர்த்து, புன்செய்களைச் சமப்படுத்தி; கீழவீதியைச் சாலையைவிட்டுப் பிரித்து, முப்பத்தாறு கெஜம் அகலம் வைத்தொழுங்கி; மற்றைய வீதிகளை இருபத்து நாலுகெஜம் அகலம் வைத்தொழுங்கி; கீழவீதிக்கும் சாலைக்கும் இடையில் தெற்குவடக்கில் இரண்டு கட்டிடங்கள் அமைத்து; அவ்விருகட்டிடங்களின் நடுவில் ஐந்து தேர்நிலைகள் அமைத்து; துருவாசதீர்த்தத் தென்கரையில் அகரமும், வடகரையில் சாதுக்கள் மடம், சரசுவதிசபை என்பனவும் அமைத்து; பலரைக்கொண்டு பசுமடம் திருநந்தனவனம், இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, குருபூசைமடம், துருவாச தீர்த்தம் படித்துறை முதலியன அமைத்து; கலி ஐயாயிரத்துப் பன்னிரண்டுக்குச் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்றில் விரோதிகிருது வருஷம் சித்திரை மாசம்

குருவாரம் புனர்பூச நட்சத்திரங்கூடிய சுபதினத்தில் மகா கும்பாபிஷேகஞ் செய்வித்து; அன்றிரவில் விநாயகரை மூஷிக வாகனத்திலும், சுப்பிரமணியரை மயில் வாகனத்திலும், சோமாஸ்கந்தரை வெள்ளியிடப வாகனத்திலும், தேவியாரை மற்றொரு வெள்ளியிடப வாகனத்திலும், சண்டேசுர நாயனாரை பவளக்காற் படிச்சட்டவிமானத்திலும், திருவீதிகளில் எழுந்தருளப் பண்ணினார். இம்மாதிரிக் கும்பாபிஷேகம் நடந்திராவென்பதும், நடக்காவென்பதும் திண்ணமேயாகும். பின்பு இருபத்தைந்து நாளோடு மண்டலாபிஷேகத்தைப் பூர்த்திசெய்து, வைகாசி மாசம் பூர்வபக்கம் சதுர்த்தியும், புனர்பூசமும், புதன்கிழமையுங்கூடிய சுபதினத்தில் த்வஜாரோகணம் என்னும் இடபக் கொடியேற்றி, அன்று பவளக்காற் படிச்சட்ட விமானங்களிலும், இரண்டாநாள் சூரியப்பிரபை சந்திரப்பிரபைகளிலும், மூன்றாநாள் பூதன் பூதகிகளிலும், நான்காநாள் நந்தி அன்னங்களிலும், ஐந்தாநாள் வெள்ளியிடபங்களிலும், ஆறாநாள் கற்பவிருட்சம் காமதேனுகளிலும், ஏழாநாள் (திருக்கலியாணம்) யானை புஷ்பப்பல்லக்குகளிலும், எட்டாநாள் கைலாசபர்வதம் குதிரைகளிலும், ஒன்பதாநாள் மகாரதங்களிலும் பஞ்சமூர்த்திகளையும் திருவீதிகளில் எழுந்தருளப் பண்ணினார். ஒன்பதாநாள் மகாரதங்கள் நிலைக்கு வரவில்லை. பத்தாநாள் வெள்ளிக்கிழமையும், விசாக நட்சத்திரமுங்கூடிய பகல் பதினைந்து நாழிகைக்கு சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருந்த மகாரதம் தெற்கு வீதியிற் போகும்போது பிரமதீர்த்தத் தென்கரையில் சபாநாயகப்பெருமான் திருச்சந்நிதானத்துக் கெதிரில் அம்மகாரதத்துக்கு வலப்பக்கத்தில் மகாதேவா! மகாதேவா!! மகாதேவா!!! வெனப் பன்முறை புகன்று தன்னை மறந்து ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு வந்த **ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகள்** மகாதேவா! வெனக்கூப்பிட்டசப்தத்தோடு தேரிற்சென்று சிவசோதியுள் இரண்டறக் கலந்து, இத்தலத்திலேயே திருக்கோயில் கொண்டு விளங்குவாராயினார். திருவாரூரைப்போலப்

பிறப்போருக்கும், திருக்காசியைப்போல இறப்போருக்கும், திருத்தில்லைச் சிற்றம்பலத்தைப்போல தரிசிப்போருக்கும், திருவருணையைப்போல நினைப்போருக்கும் முத்தியளிக்கும் இத்தலத்தில், சைவசமய முதற்குரவராகிய துருவாச முனிவரோடு, அவருக்குப்பக்கத்தில் எழுந்தருளியிருந்து, சபாநாயகப்பெருமானுடைய ஆனந்தத்தாண்டவ தரிசனப் பெரும்பேற்றைப் பெறுவது, உலகமுள்ளளவும் கோயிலூர்ப் பரம்பரைக்குப் பேருயர்வும் பெருவாழ்வும். பெரும்பேறு மாகும்; அன்றியும் கோயிலூர்ப் பரம்பரையினர்களை வரவழைத்து, இத்தலத்தில் "சரியை, கிரியை, யோகம், ஞானம்" என்பவற்றைக் கைக்கொண்டு "சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய" பதங்களை அடையுங்களென்று சொல்லாமற் சொல்கின்றாரென்பதும்; தம்முடைய மரபோர்களாகிய நகரவணிகக் கனதனவான்களை வரழைத்து,

> "கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ் செல்வம்
> போக்கு மதுவிளிந் தற்று"

என்று திருவள்ளுவநாயனார் கூறியிருக்கின்றார்; 'செல்வம்' என்னும் பதமானது 'போய்விடுவோம்' என்னும் அருத்தத்திலேயேயிருக்கின்றது; காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்; நீங்கள் எல்லீரும் உங்களால் இயன்ற வரையில் "சரியை, கிரியை" என்னும் திருத்தொண்டுகளைச் செய்யுங்களென்று கட்டளையிடுகின்றாரென்பதும் நன்குபுலனாகின்றன. தெய்வத்தன்மை பொருந்திய ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் முத்தித்தலமாகிய இத்தலத்தைத் திருப்பணி செய்து, பிரமோத்ஸவம் நடத்தி, இத்தலத்திலேயே திருக்கோயில்கொண்டு, "திருக்களர் ஆண்டவர்" என்னும் காரணப்பெயர்பெற்று விளங்குவதால் இம் மகாமூர்த்திகள் திருப்பணிசெய்த திருக்கோயிலுக்கு எவ்விதக் குறைவும் நேரிடாவண்ணம் பாதுகாப்பது, கோயிலூர் பரம்பரைக்கும், நகரவணிகக் கனதனவான்கட்கும், கடமையே யாகும். எக்காரணத்தை முன்னிட்டாயினும் கவனிக்காதிருப்பார்களாகில் அஃது அம் மகாமூர்த்திகளுடைய திருநோக்கத்துக்கு

விரோதமேயாகும். அம்மூர்த்திகள் திருநோக்கத்துக்கு விரோதமாக நடப்பவர்கள் குருத்துரோகிகளேயாவர்.

தேவியார் வெள்ளிக்கவசம்.

மேற்கண்ட களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்கள் ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் அபிப்பிராயப்படி மேற்கண்ட இராசு முதலியாரவர்களுக்கு உதவியாக இராப் பகல் நித்திரையின்றிப் பெருமுயற்சியோடு சீருஞ்சிறப்பும் பொருந்த மேற்படி திருப்பணி கும்பாபிஷேகம் முதலிய வற்றை நிரம்பக் கவனித்து நன்குபெறச் செய்துமுடித்துக், கையிலிருந்து ரூ. 20000 (இருபதினாயிரம்) செலவிட்டு ஸ்ரீ அமுதவல்லியம்பாளுக்கு **வெள்ளிக்கவசம்** செய்து சாத்தியும், இலட்சதீபம் போட்டும்; 1908-ம் வருஷம் முதல் 1918-ம் வருஷம் வரையில் மேற்படி கோவிற் "பூசனை, திருவிழா" முதலியவற்றை பக்திசிரத்தையோடு கவனித்துக் காலாகாலத்தில் மந்திரலோபம் கிரியாலோபம் இன்றி, விதிப் படி செய்வித்தும் பெரும்புகழெய்தினர். இவர் காலத்தில் குளோப்பர் முதலிய தீபங்களெல்லாம் பூரணசந்திரன்போற் பிரகாசித்தன. இராத்திரியில் "பொங்கல், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, சம்பா" என்னும் வர்க்கான்னங் களும், பகலில் "ததியோதனம், குழித்தளிகை" என்னும் அறுசுவை அன்னங்களும் அமுதம்போல் நிவேதனமாயின. சுவாமி புறப்பாடாகும் விசேட தினங்களில் எண்ணிறந்த அதிர்வெடிகள் விண்ணுலகை பிடித்தன. இவரைப்போல் பக்தி சிரத்தையோடு கோவிலைக் கவனித்துப் பரிபாலிப்ப வர்கள் உண்டென்று சொல்வது மிகையேயாகும்.

சபாநாயகர் வெள்ளிக்கவசம்.

மண்கொண்டான் என்னும் ஊரிலே, வழிவழி அகம்படித்தொண்டு பூண்டொழுகும் அகம்படியர் மரபிலே, பரம்பரைச் சைவர் கால்வழியிலே, சுவாமிநாத ஞானியார், என்பவர் ஒருவரிருந்தார். அவர் சிறந்த சிவபக்தியும்

சிவகாருண்ய மு முடையவர்; தேகம் அநித்தியம் என்பதை நன்குணர்ந்தவர்; சபாநாயகப்பெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டவர்; சபாநாயகப்பெருமானுடைய ஆறு அபிஷேகங்களி லொன்றாகிய மார்கழித் திருவாதிரை அபிஷேகத்தை மிக்க பக்தி சிரத்தையோடு செய்விப்பவர்; இவர் தமக்கிருந்த சொற்பப் பூமியாகிய நன்செய் நிலத்தை மேற்படி திருவாதிரை அபிஷேகத்திற்கு எழுதிவைத்து விட்டு சபாநாயகப் பெருமானுடைய குஞ்சிதபாத நீழலை யடைந்தார். அவருடைய அருந்தவப் புதல்வராகிய சிதம்பர சபாபதி பிள்ளை என்பவர், அதிபால்ய முதல் மிக்க அன்போடு மேற்படி அபிஷேகத்தை நடத்திவந்தார். கோவிலைக் காடு மூடியிருந்த காலத்திலும் சிரத்தையோடு நடத்திவந்தார். அக்காலத்தில் இவர் நடத்திவந்த திருவாதிரைத் திருவிழாவைவிடச் சிறந்த திருவிழா நடந்த தாகத்தெரியவில்லை; எட்சணி என்னும் தொழிலால் ஒன்பது வேலி நிலம் சம்பாதித்தார்; திருவாதிரை அபிஷேகத்திற்கு தந்தையார் எழுதிவைத்த நிலத்துக்குப் பக்கத்திலிருந்த புறம்போக்குத் தரிசுக்கு அண்டைப்பாத்திய மனுக்கொடுத்து பட்டாச்செய்து வெட்டி ஷெ நிலத்தோடு சேர்த்துப் பத்துமா நிலமாக்கி வைத்திருக்கிறார்; திருப்பணி நடந்தகாலத்தில் ரூ. 500 (ஐந்நூறு) செலவிட்டு சபாநாயகப் பெருமானுக்கு **"வெள்ளிக்கவசம்"** செய்து சாத்தியிருக் கிறார்; கும்பாபிஷேகத்துக்குப் பிறகு வருஷம் ஒன்றுக்கு ரூ. 350 (முந்நூற்றைம்பது) செலவிட்டு திருவாதிரைப் பத்து நாள் உற்சவத்தையும் நடத்திவந்தார்; சபாநாயகப்பெருமா னிடத்தில் மிக்க பேரன்புடையவர்; திடும்பிரவேசமாக மரணவாதனை சிறிதுமின்றி சபாநாயகப்பெருமானுடைய குஞ்சிதபாத நீழலை அடைந்தார். இவருக்கு வாரசாகவந்த இராமகிருஷ்ண பிள்ளை என்பவர் மேற்படி திருவாதிரை உபயத்தை நிறுத்திவிட்டு, அந்த உபயத்துக்கு ஏற்பட்ட நிலத்தை மாத்திரம் அனுபவித்துக்கொள்ளுகிறார். இதைக் கவனித்து மேல் நடவடிக்கை நடத்தக்கூடியவர்கள் ஒருவருமில்லை.

தேவியார் தங்கக்கவசம்; இருக்குவேத பாடசாலை.

காரைக்குடி பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் கோவிலுக்குச் சொந்தமான ரூ. 2400 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்கு நன்செய் நிலம் வாங்கிக் கொடுத்துப் பரிவர்த்தனைசெய்து, ரூ. 57600 செலவிட்டுக் கட்டிடங்கட்டி, அதில் **இருக்குவேத பாடசாலை** அமைத்து, திருக்களரில் ரூ. 21500-க்கு நன்செய் நிலம் வேலி 5-ம் திருத்துறைப்பூண்டி தாலூகா ஒருக்குடியில் ரூ. 40000-க்கு நன்செய் நிலம் வேலி 32-ம் கிரயசாசனம் வாங்கிவைத்து, அவற்றின் வரும்படியைக்கொண்டு வருஷம் ஒன்றுக்கு இருக்குவேத பாடசாலையில் வாசிக்கிற 12 பிள்ளைகளின் செலவுக்காக ரூ. 2000-மும் உற்சவ சமாராதனைக்கு ரூ. 500-ம் திருவநந்தகட்டளைக்கு ரூ. 500-ம், குழித்தளிகைக்கு ரூ. 142-ம், உருத்திரசெபக் கட்டளைக்கு ரூ. 84-ம், தேர் மண்டபப்படிக்கு ரூ. 50-ம், மகாசிவராத்திரிக்கு ரூ. 50-ம், அம்பாள்சந்நிதி நேத்திர விளக்குக்கு ரூ. 24-ம், நித்தியப்படி அருச்சனைக்கு ரூ. 24-ம் செலவிட்டுவந்தார். ஸ்ரீ அமுதவல்லியம்பாளுக்கு ரூ. 25000-க்கு **தங்கக்கவச**மும், ரூ. 2500-க்கு இரத்தினத்தாலிக்கோர்வைச் செட்டும், ரூ. 1000-க்கு கைக்கிளி, புசக்கிளி, வைரப்புலாக்குகளும், செய்துவைத்துக்கொண்டு விசேஷதினங்களில் அலங்காரஞ் செய்யும்படி கொடுத்துவந்தார். 1927-ம் ௵ ஏப்ரல்—மீ 28உயில் ஒரு உயில் எழுதி, 30உயில் ஆதிச்சபுரம் சப்ரிஜிஸ்டரில் பதிவுசெய்து, மேற்படி உயிலையும், திருவாபரணங்களையும், தன்னுடைய சுவிகார குமாரனாகிய பழ. வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியாரிடத்தில் ஒப்புவித்துவிட்டு இறந்துபோய்விட்டார். மேற்படி வெங்கடாசல செட்டியார் மேற்படி தருமங்களையெல்லாம் நிறுத்திவிட்டார். இருக்குவேத பாடசாலையில் 5 பிள்ளைகள் மாத்திரமிருக்கின்றன. இதைக் கவனிக்கக்கூடியவர்களிருப்பதாகத் தெரியவில்லை.

எசுர்வேத பாடசாலை.

காரைக்குடி ஆத. பழ. பழனியப்ப செட்டியாரவர்கள், கோவிலுக்குச் சொந்தமான ரூ. 600 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்கு நன்செய் நிலம் வாங்கிக்கொடுத்துப் பரிவர்த்தனைசெய்து, அதிலிருந்த கட்டிடத்துக்கு ரூ. 7900 கொடுத்து கிரயசாசனம்வாங்கி, அதில் திருஒற்றியூரிலிருந்த **எசுர்வேத பாடசாலை**யை எடுத்துக்கொண்டுவந்துவைத்து, அதில் வாசிக்கிற 14 பிள்ளைகளுக்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 2500 செலவிட்டுவந்தார். அவருக்குப்பிறகு அவருடைய சுவிகாரகுமாரராகிய ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள், கோவிலுக்குச் சொந்தமான ரூ. 900 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்கு நன்செய் நிலம் வாங்கிக்கொடுத்துப் பரிவர்த்தனைசெய்து, அதில் ரூ. 10000 செலவிட்டு பங்களாகட்டி, செல்லப்பிள்ளையார் கோட்டகத்தில் ரூ. 9000-க்கு நன்செய் நிலம் வேலி $3\frac{3}{4}$ கிரயசாசனம் வாங்கிவைத்து, மேற்படி எசுர்வேத பாடசாலைக்காகவும், பிரமோற்சவத்தில் நாலாந்திருவிழா நந்தி அன்னவாகன மண்டபப்படிக்காகவும், வெள்ளிக்கிழமை சுவாமி அம்பாள் அருச்சனைக்காகவும், வருஷம் ஒன்றுக்கு ரூ. 3000 செலவிடுகின்றார். இவர் சிவபக்தியில் கண்ணப்பநாயனருக்கு ஒப்பானவர்; மேளக்கச்சேரியில் மிக்க பேரன்புடையவர்; சிவதிருத்தொண்டைச் சீரும் சிறப்பும் பொருந்த நடத்துகின்றவர்; பத்துலட்சமுடையவர்.

பசுமடம்; திருநந்தனவனம்.

காரைக்குடி ராம. ஆத. மெ. இராமசாமிசெட்டியாரவர்களும், ஆத. லெ. ஆத. ஆதப்ப செட்டியாரவர்களும் கூட்டாகக்கோவிலுக்குச்சொந்தமான ரூ. 4380 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்கு நன்செய் நிலம் வாங்கிக்கொடுத்துப் பரிவர்த்தனைசெய்து, பதிதருமமாகிய **பசுமடம், திருநந்தனவனம்** என்பவற்றிற்காக ரூ. 25000 செலவிட்டுக் கட்டிடம், பசுத்தொழு, திருமதில், கிணறு முதலியன அமைத்து, பசுக்கள் 25 வைத்து, நாள்தோறும்

காலை மாலை இரண்டு வேளைகளிலும், அபிஷேகத்திற்கு பால் சேர் 50 கொடுத்தல்; "கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ" என்பவற்றை விருத்திசெய்து, நாள்தோறும் "தோடு, கொன்றைமாலை, தொடைமாலை, இண்டை, கண்ணி" முதலிய மாலைகள் கட்டிச்சாத்துதல்; நாள்தோறும் அறுசுவை நிறைந்த நால்வகை யுணவாகிய குழித்தளிகை நிவேதனஞ்செய்வித்தல்; பிரமோற்சவத்தில் எட்டாந் திருவிழா கைலாசபர்வதம் குதிரைவாகனம் மண்டபப்படி செய்வித்தல் முதலிய தருமங்களுக்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 4000 செலவிட்டார்கள். அவர்களுக்குப்பிறகு அவர்களுடைய குமாரர்களாகிய ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களும், ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்களும் நடத்துகின்றார்கள். பசுமடத்தை யிடித்து ரூ. 50000 செலவிட்டுப் புதிதாகக் கட்ட எத்தனப்பட்டுக்கொண் டிருக்கின்றார்கள். அறுபதுலட்ச முடையவர்கள்; சிவபக்தியிற் சிறந்தவர்கள்; கோவிலை அன்போடு நடத்தும் ஆற்றலுடையவர்கள்.

குருபூசைமடம்; தேவாரபாராயணம்.

பாகனேரி பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்களும், காரைக்குடி முத்து. அரு. மு. சாமிநாதசெட்டியாரவர்களும் கூட்டாகக் கோவிலுக்குச் சொந்தமான ரூ. 2700 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்கு நன்செய் நிலம் வாங்கிக்கொடுத்துப் பரிவர்த்தனை செய்து, ரூ. 50000 செலவிட்டுக் கட்டிடங்கட்டி, அதில் 'வலம்புரி விநாயகர் திருவுருவம், அறுபத்துமூவாரதியோர் படம், அறுபத்து நான்கு திருவிளையாடற் படம், சிவபராக்கிரமப் படம்' என்பவற்றைத் தாபித்து, அதற்காக ரூ. 14000-க்கு நன்செய் நிலம் வாங்கிவைத்து, தேவாரத்திருப்பதிகங்களை மனதினிடத்தில் வைத்துக்கொண்டு பாடுவதினாலே ஓதுவாரெனவும், *பண்டாரமெனவும் பெயர்பெற்ற சைவத்திருவாளர்களைக் கொண்டு மத்தியானத்தில் சுத்தான்ன நிவேதனமும், மாலையில் கற்கண்டு நிவேதனமும் செய்விக்கச்செய்து, சமயகுரவர்

* பண்டாரம்—தேவார பொக்கிஷம்.

நால்வர் முதலான "அறுபத்துமூன்று நாயன்மார்கள், ஒன்பது பொது அடியார்கள், நான்கு சந்தானகுரவர்கள்" என்பவர்களுடைய திருநட்சத்திரங்களில் கோவிலில் எழுந்தருளியிருக்கின்ற, அந்தந்த நாயனருடைய திருவுருவத்துக்கு அபிஷேகாதிகள் செய்து, சர்க்கரைப் பொங்கல் நிவேதனஞ் செய்வித்தல்; சமயகுரவர்களைத் திருவீதிகளில் எழுந்தருளச் செய்வித்தல்; ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளுடைய திருமடத்திலிருக்கிற திருத்தொண்டர்களுக்கும், 'தேவார பொக்கிஷம் என்னும் தேவாரபண்டாரங்களாகிய திருத்தொண்டர்களுக்கும், உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு, கைப்பு, தித்திப்பு என்னும் அறுசுவை நிறைந்த உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது என்னும் நால்வகை உண்டிகளையும் படைத்தல்; தேவாரபண்டாரத் திருத்தொண்டர்களுக்குச் சமயகுரவர் திருநட்சத்திரங்களில் தலா அணு 4 வீதமும், மற்றையோர் திருநட்சத்திரங்களில் தலா அணு 2 வீதமும் தட்சிணைகொடுத்தல்; மூன்று தேவாரபண்டாரங்களாகிய திருத்தொண்டர்களுக்குச் சம்பளங் கொடுத்து நாள்தோறும் கோவிலில் தேவாரத்திருப்பதிகங்கள் பாராயணஞ் செய்வித்தல்; பிரமோற்சவத்தில் ஆறுந்திருவிழா கற்பகவிருட்சம், காமதேனு மண்டபப்படிசெய்வித்தல்; திங்கட்கிழமை தோறும் சுவாமிக்கும், வெள்ளிக்கிழமை தோறும் தேவியாருக்கும் அருச்சனைசெய்வித்தல் முதலியவற்றிற்காக, வருஷம் ஒன்றுக்கு ரூ. 2500 செலவிட்டுவந்தார்கள். அவர்களுக்குப் பிறகு மேற்படி முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் சுவிகார குமாரராகிய பெரி. அழ. மு. முத்துக்கருப்பசெட்டியாரவர்களும், மேற்படி சாமிநாத செட்டியாரவர்கள் மனைவியாரும், மைனர் முத்து. அரு. சா. அரு. சோமசுந்தர செட்டியாரவர்கள் தாயாருமாகிய சீதைஆய்ச்சி அவர்களும் மேற்படி தருமங்களை நடத்துகின்றார்கள். மேற்படி சீதைஆய்ச்சி அவர்கள் சிறந்த சிவபக்தியும், நிறைந்த சிவகாருண்யமும், பரந்த பெரும்புகழு முடையவர்; நாற்பதுலட்ச முடையவர். மேற்படி முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் 'சிவபக்தி,

அடியார்பக்தி, சிவகாருண்யம்' என்பவற்றில் மிகச்சிறந்தவர். திருக்களர்த் திருக்கோயிலினிடத்தில் மிக்க பேரன்புடையவர். 'நித்தியம், நைமித்திகம்' "என்னும் பூசை, திருவிழா" முதலியவற்றை மிக்க பேரன்போடு நடத்தவேண்டுமென்ற தோற்றம் பெரிதுமுடையவர்; எழுபதுலட்ச முடையவர்.

திருக்குளப் படித்துறை.

காரைக்குடி சா. நா. அ. அழ. அழகப்பசெட்டியாரவர்கள் ரூ. 5001 செலவிட்டு "தருவாசதீர்த்தம், லோகாலோக்கியதீர்த்தம்" என்னும் பெயர்களையுடைய பெருமை தங்கிய திருக்குளத்தை வெட்டி, நான்குபுறமும் மதிலெடுத்து, நான்கு புறத்திலும் படித்துறைகள் கட்டியிருக்கிறார். பாய்வாய்க்காலும், வடிவாய்க்காலும் சரியான முறையில் அமைக்கப்படவில்லை. தண்ணீர் பச்சிலைக்கியாழம்போல் ஸ்நான பானங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாதநிலைமையில் தொத்து நோய் முதலியவற்றைத் தாக்கூடியதாயிருக்கிறது. இந்த நிலைமையில் "கோவில், இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாமவேத பாராயணம், மடம், குருபூசைமடம், குருக்கள்வீடு, பரிசாரகர்வீடு" என்பவற்றிற்குப் பத்துத்தேய்க்கும் உத்தமப் பெண்சிகாமணிகளால் சலத்துக்குள் மேல்புறம் படித்துறையில் ஒரு மண்மலையும், தென்புறம் வடபுறம் படித்துறைகளில் இரண்டு மணற்குன்றுகளும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. நான்கு படித்துறைகளிலும் பெரும்பகுதியான கற்கள் சிதைந்து போய்விட்டன. கீழ்புறம் படித்துறைக்குப் பின்புறம் ஓரமாக வெட்டியிருந்த அறுப்புக்குழியில் மழைச்சலம் தங்கிய காரணத்தினால் படித்துறையின் கீழ்சுவர் வெடித்துச்சாய்ந்திருக்கிறது. விரைவில் விழுந்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. இந்தத் தருமம் ஏற்பட்டு வருஷம் 22 ஆகிறது. இதுகாறும் இந்தத் தருமத்தைக் கவனித்துச் சீர்திருத்தஞ் செய்யாத மேற்படி அழகப்பசெட்டியாரவர்கள் குமாரர்கள் வேறு எந்தத் தருமத்தையுங் கவனித்து நடத்துவார்களென்று நம்புவதற்குச் சிறிதும் ஆதாரமில்லை.

சாமவேத பாராயணம்.

ஆத்தங்குடி சா. நா. நாச்சியப்ப செட்டியாரவர்கள், கோவிலுக்குச் சொந்தமான ரூ. 600 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்கு நன்செய் நிலம் வாங்கிக்கொடுத்துப் பரிவர்த்தனைசெய்து, அதிலிருந்த கட்டிடத்துக்கு ரூ. 4500 கொடுத்து கிரயசாசனம் வாங்கி, அந்தக்கட்டிடத்தில் சாமவேதியர் மூவரைக் குடிவைத்து, அவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 720 சம்பளங்கொடுத்து, கோவிலில் நாள்தோறும் **சாமவேத பாராயணம்** செய்வித்துவந்தார். அவருக்குப் பிறகு அவருடைய குமாரராகிய சா. நா. தெய்வராய செட்டியாரவர்கள் மேற்படி கருமத்தை நடத்திவருகின்றார்.

விபூதிமடம்; கங்காபிஷேகம்.

காரைக்குடி சி. பழ. லெ. நாகப்ப செட்டியாரவர்கள் கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1500 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்கு நன்செய் நிலம் வாங்கிக்கொடுத்துப் பரிவர்த்தனைசெய்து வைத்திருக்கிறார். அதில் **விபூதி மடம்** கட்டவேண்டியதற்காக ரூ. 20000 பண்டு வைத்திருக்கிறார். நாள்தோறும் சுவாமிக்கும் தேவியாருக்கும் "கங்காதீர்த்தம் அபிஷேகஞ் செய்வித்தல், விபூதியபிஷேகஞ் செய்வித்தல், அகண்டதீபம் வைத்தல், சாம்பிராணித்தூபம் போடுவித்தல்" முதலியவற்றிற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 1000 செலவிட்டு நடத்துகின்றார்.

தேவியார் வெள்ளிவிமானம்.

அழகாபுரி சி. சு. சுப்பிரமணிய செட்டியாரவர்கள் பிரமோற்சவத்தில் இரண்டாந் திருவிழா முதல் எட்டாந் திருவிழா வரையில், காலை விழாவில் தேவியார் எழுந்தருளித் திருவுலா வருகைக்கு அதியற்புத அலங்காரம்பொருந்திய

ஓர் **வெள்ளிவிமானமும்**, சுவாமி எழுந்தருளித் திருவுலா வருகைக்குச் சீருஞ்சிறப்பும் பொருந்திய மிக்க அலங்காரமுடைய ஓர் சித்திர விமானமும்; ரூ. 5000 செலவிட்டுச் செய்து வைத்திருக்கின்றார்.

178328
600 008.

ஐவேஜ்

கோவிலுக்குச் சொந்தமாகத் திருக்களர் கிராமத்தில் நன்செய் நிலம் வேலி 17, குமாரமங்கலம் கிராமத்தில் நன்செய் நிலம் வேலி 2 மா 10, ஆக நன்செய் நிலம் வேலி 19 மா 10 இருக்கிறது. இதில் மேளம் வகையரு மானியம் வேலி 1 மா 5 நீக்கி, வேலி 18 மா 5; இந்தப்பதினெட்டுவேலி ஐந்துமா நிலத்தையும், பண்ணைவைத்துச் சாகுபடிசெய்யும் பட்சத்தில் எச்செலவும் போக வருஷம் ஒன்றுக்கு நெற்கலம் 3000 சண்டிப்பாய்க் கண்டுமுதலாகும். பண்ணைவைத்துச் சாகுபடி செய்யாத காரணத்தினால் ஏராளமாக நஷ்டமுண்டாகிக் கொண்டே வருகிறது. "திருக்களர், குமாரமங்கலம், குறுக்கை" முதலிய கிராமங்களில் புன்செய் நிலம் வேலி 7 மா 7 இருக்கிறது. இந்த ஏழு வேலி ஏழுமா நிலத்திலும், குறைந்தது (15000) பதினையாயிரம் தென்னம்பிள்ளை வைத்துப் பயிராக்கலாம். சரியான முறையில் பயிர்செய்யும் பட்சத்தில் ஐந்து வருஷத்தில் காய்ப்புக்கு வந்துவிடும். தென்னம்பிள்ளை வைத்துப் பயிராக்குவதற்கு மூன்றுவழிகளுண்டு. ஒன்று சொந்தத்தில் அசாமிகள் வைத்துச் சம்பளங் கொடுத்துப் பயிர்செய்வது; மற்றொன்று புன்செய்த் தலங்களைப் பலபேரிடத்தில் பகுதிக்குக் கொடுத்து, அந்தப் பகுதிக்குப் பதிலாகத் தென்னம்பிள்ளை வைத்துப் பயிராக்கும்படி செய்வது; இன்னொன்று மரப்பாதிக்குக் கொடுத்துத் தென்னம்பிள்ளை வைத்துப் பயிராக்கும்படி செய்வது. பதினையாயிரம் தெங்கு காய்ப்புக்குவரும் பட்சத்தில் வருஷம் ஒன்றுக்குக் குறைந்தது ரூ. 15000 வரும்படி வரக்கூடும்.

O128:38.213 CK
NBJ

ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளுக்குப் பின் குருமூர்த்தியாய் விளங்கிய ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் ஏழைக்கோவில் என்பதை நன்குணர்ந்து, மேற்படி கோவிலின் நித்தியப்படி பூசை படித்தரம் முதலியவற்றிற்காக நிலம் வாங்கிவைக்கும் பொருட்டு, மேற்படி ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளுடைய மாணாக்கர்களிலிருவராகிய ஸ்ரீமத் சுப்பைய ஞானதேசிக சுவாமிகள், ஸ்ரீமத் நாராயணசுவாமி ஞானதேசிக சுவாமிகள் என்பவர்களையும்; இருக்குவேத பாடசாலை தருமகர்த்தாவாகிய பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள், பசுமடம் திருநந்தனவனம் தருமகர்த்தாக்களி லொருவராகிய ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியாரவர்கள் என்பவர்களையும் "பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், சைகோன், இரங்கூன்" முதலிய தேசங்களுக்கு அனுப்பியும், பின்னால் பல சிபார்சுக் கடிதங்கள் வாங்கி அனுப்பியும் ரூ. 80000 வசூல் செய்து, திருத்துறைப்பூண்டி தாலூகா மருதவனம் கிராமத்தில் ரூ. 42000 கொடுத்து நன்செய் நிலம் வேலி 12 மா 10 கிரயசாசனம் வாங்கி வைத்திருக்கிறார்கள். மேற்படி ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளுக்குப் பின் குருமூர்த்தியா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகள், மேற்படி மருதவனம் கிராமத்தில் ரூ. 17000 கொடுத்து நன்செய் நிலம் வேலி 5 மா 6 கிரய சாசனம் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆக நன்செய் நிலம் வேலி 17 மா 16 இந்த பதினேழு வேலி பதினாறுமா நிலத்தில், கொல்லங்குடி அழகாபுரி உ. தெ. மெ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் கூட்டக்கட்டளைக்காகக் கொடுத்த பணமுஞ் சேர்ந்திருக்கிறது. மேற்படி நிலம் வருஷம் ஒன்றுக்கு நெற் கலம் 1780-க்கு குத்தகை விடப்பட்டிருக்கிறது. பண்ணைவைத்துச் சரியான முறையில் சாகுபடி செய்யும் பட்சத்தில் வருஷம் ஒன்றுக்கு நெற் கலம் 3000 கண்டு முதலாகும். மேற்படி நிலத்தின் வரும்படியிலிருந்து

கோவிலுக்கு வருஷம் ஒன்றுக்கு அரிசி கலம் 130-ம், சூடம் வீசை 12-ம் கொடுத்துவருகிறார்கள். (ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளாகிய ஆண்டவர், மேற்படி அரிசியில் "கல் நெல் சம்பந்தமில்லாதிருக்க அருள்புரிவாராக.)

நித்தியப்படி பூசனை.

ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் திருப்பணிக்கு பாலாலயஞ்செய்த அன்று முதல் "காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தயாமம்" என்னும் நான்கு காலப் பூசனை ஏற்படுத்தினார்கள். ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் மருதவனம் கிராமத்தில் நிலம் வாங்கிய அன்று முதல் இரண்டாங்காலப் பூசனை ஏற்படுத்தினார்கள். இருக்குவேத பாடசாலை, பசுமடம், திருநந்தனவனம் ஏற்படுத்திய அன்று முதல் அத்தருமகர்த்தாக்களால் சிவலிங்கப்பெருமானுக்கும் தேவியாருக்கும் குழித்தளிகைகள் ஏற்படுத்தப்பட்டன. இருக்குவேத பாடசாலை தருமகர்த்தா, கோவில் விசாரணையை ஒப்புக்கொண்ட காலமுதல் "திருவநந்தல், உருத்திரசெபம், அருச்சனை" என்னும் கட்டளைகள் ஏற்படுத்தி அன்போடு நடத்திவந்தார். அவர் இறந்த பின்பும் சில காலம் நடந்துவந்தன. இப்போது அவருடைய சுவிகார குமாரராகிய பழ. வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியாரவர்கள் சுவிகார தகப்பனார் சாசுவதமாக ஏற்படுத்திவைத்த தருமங்கள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டார். மடத்திலிருந்து "வலம்புரி விநாயருக்கும், சிவலிங்கப்பெருமானுக்கும், தேவியாருக்கும்" ஏற்படுத்தியிருக்கும் அருச்சனைகள் தினப்படி நடந்துவருகின்றன. குருபூசைமடத்தில் திங்கட்கிழமையில் சிவலிங்கப்பெருமானுக்கும், வெள்ளிக்கிழமையில் தேவியாருக்கும் ஏற்படுத்தியிருக்கும் அருச்சனைகளும்; எசுர்வேத பாடசாலையில் வெள்ளிக்கிழமையில், சுவாமிக்கும் அம்பாளுக்கும் ஏற்படுத்தியிருக்கும் அருச்சனைகளும் நடந்துவருகின்றன. விபூதிமடத்துக் கட்டளையாகிய "கங்காதீர்த்த அபிஷேகம்,

விபூதி அபிஷேகம், அகண்டதீபம்வைத்தல், சாம்பிராணித் தூபம்போடல்" என்பன மிக்க அன்போடு நடக்கின்றன. பசுமடம், திருநந்தனவனம் என்பவற்றின் கட்டளையாகிய குடப்பால் அபிஷேகமும், பணிமாலைப் புஷ்பாலங்காரமும் வெகு ஆனந்தமாக நடக்கின்றன. நாளொன்றுக்கு அரிசி மரக்கால் 4 படி ½ திட்டம் ஏற்பட்டிருக்கிறது. "குருக்கள் அரிசி மரக்கால் 1, பரிசாரகர் அரிசி மரக்கால் 1, பொங்காமல் அரிசியாகவே எடுத்துக்கொண்டு போய்விடுகின்றார்கள். காலை மாலை இரண்டுவேளைகளிலும் அரிசி மரக்கால் 2 படி ½ மாத்திரம் பொங்கப்படுகிறது. நித்தியப்படிக்கு ஏற்பட்ட திட்டத்தில் பாதி அரிசியைப் பொங்குவதும், பாதி அரிசியைப் பொங்காமல் எடுத்துக்கொண்டு போவதும் எப்படியிருக்கிறதென்றால், ஒரு சுரைக்காயில் பாதியைக்கறிக்கு எடுத்துக்கொண்டு, பாதியை விதைக்கு வைத்திருப்பதுபோ லிருக்கிறது. சுந்தரமூர்த்தி நாயனாரால் "தில்லைவாழ்ந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என்று சிறப்பித்துக் கூறப் பெற்ற சிதம்பரம் திட்சதர்களாகிய பூசகர்கள்கூட சிவப்பிர சாதத்தை இகழாமல் பொங்கி நிவேதனஞ் செய்து, எடுத்துக் கொண்டு போகின்றார்கள். சிவபெருமானை மதிக்காமல் அரிசியாக எடுத்துக்கொள்ள நினைப்பார்களாகில் எவ்வளவோ அரிசி எடுத்துக்கொள்ளலாம். சிவபெருமானிடத்தில் அன்பின்றிச் சிவபெருமானையும், சிவப்பிரசாதத்தையும் இகழ்ந்து அரிசியாக எடுத்துக்கொண்டு போகின்ற மகா சிவத்துரோகிகளாகிய குருக்கள் பரிசாரகர்களை வைத்துப் பூசைசெய்வதை விட அதிபாதகம் வேறொன்று மில்லை. குருக்கள் பரிசாரகர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரசாதத்துக்கு அரிசி எடுத்துக்கொள்வதுபோல, மேளம் வகையறா அசாமிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பிரசாதத்துக்கும் அரிசியாகக் கொடுத்து விடுகிறபட்சத்தில், அதிக சோலியில்லாம லிருக்கலாம். "அரைப்படி அரிசி அன்னதானம், விடியும்வரையில் மேளதாளம்" என்பதுபோலப் பட்டணம் படியால் நாலேகாற்படி அரிசி பொங்கல். இதற்கு "அறைதிருமாலை (1), குருக்கள் (2), பரிசாரகர் (2), மேளம் சதை (2), நட்டுமுட்டு (2),

கிடுகொட்டி (1), உடல் (1), சங்கு தம்பட்டம் (1), திருச்சின்னஞ்செயகண்டி (1), திருவிளக்கு (1), மெய்காவல் கெண்டாமணியடித்தல் (1), கூட்டல் பத்துத்தேய்த்தல் (1)" என்னும் அசாமிகள் ஏற்பட்டிருக்கின்றன.

கோவிலுக்குள் எண்ணிறந்த குலோப்பர்கள் மாட்டித் தொங்கவிட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றுகூடக்கொளுத்தும் வழக்கமில்லை. கொளுத்தாமல் தொங்கவிட்டிருப்பதினல் யாதுபிரயோசனமோ அதுவுந் தெரியவில்லை. தீபங்கள் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் போடப்படுகின்றன. சுவாமி தரிசனஞ்செய்வோர் விக்கிரகங்களின் நிழலை மிதிக்காமலும், தாண்டாமலும் போக இயலவில்லை. விக்கிரகங்களின் நிழலை மிதிப்பதும் தாண்டுவதும் அதிபாதகமென்று ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. தீபங்கள் சரியான காலத்தில் கொளுத்தப்படவில்லை. திருவிளக்குப் போடுவோன் அவனுடைய சொந்த அபிப்பிராயப்படி இராத்திரி 7 மணிக்கு மேல் கொளுத்துகிறான். சோமசுந்தரப் பெருமானுக்குத் தென்புறமுள்ள விநாயகருக்குச் சில சமயங்களில் விளக்குப் போடவில்லை. சுவாமி சந்நிதியில் நந்திதேவருக்கு முன்னும் பின்னும், அம்பாள் சந்நிதி மண்டபத்திலும் மண்எண்ணெய் விளக்குகள் போடும் வழக்கம் புதிதாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன. திருவிளக்குப் போடுவோன் ஏழரை மணிக்கு மேல் சுவாமி தெரிசனஞ் செய்வோருக்குத் தடங்கலாக வழியில் பலகைமேல் ஏறிநின்று மேற்படி மண்எண்ணெய் விளக்குகளைக் கொளுத்துகிறான். கோவிற் பிரகாரம் கன்னி மூலையிலிருக்கிற விநாயகருக்கும், தேரடியிலிருக்கிற விநாயகருக்கும் ஏழரை மணிக்குமேல் சாதுக்கள் தரிசனத்துக்கு வருஞ்சமயத்தில் திருவிளக்குப் போடுகிறான். சில சமயத்தில் தேரடிவிநாயகருக்கு விளக்குப்போடவில்லை. வசந்தமண்டபத்திலிருக்கும் விநாயகருக்கும், யாகசாலையிலிருக்கும் விநாயகருக்கும் திருவிளக்குப்போடும் வழக்கம் அறவே நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சோடச உபசாரம் சாயரட்சையில், சபாநாயகப்பெருமான், சிவலிங்கப்பெருமான்' என்னும் மூர்த்திகளுக்கும்; இரண்டாங்காலத்தில் 'சோமாஸ்கந்தர், தேவியார் என்னும் மூர்த்திகளுக்கும், 'தாசி, ஆவாகனம், கரசுத்தி' என்பன வின்றி வெகு வேகமாக நடக்கின்றன. 'தாசி, ஆவாகனம், கரசுத்தி' இன்றி நடக்கும் சோடச உபசாரம், சோடச அபசாரமேயாகும். தாசி இன்றி சோடச உபசாரம் செய்யக்கூடாதென்று ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. 'சபாநாயகப்பெருமான், சிவலிங்கப்பெருமான், சோமசுந்தரப் பெருமான், தேவியார், இந்நான்கு மூர்த்திகளுக்கும் சோடச உபசார முடிவில் செய்யும் அஷ்டோத்திர நாம அருச்சனைகள் அறவே நடக்கவில்லை. சில சமயங்களில் சபாநாயகப்பெருமானுக்கு சாயரட்சை நடந்த பின்பு, சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகமும், சிவலிங்கப்பெருமானுக்குச் சாயரட்சை நடந்த பின்பு, தேவியாருக்கு அபிஷேகமும் நடக்கின்றன. பள்ளியறைக்குச் சொக்கர் அர்த்தயாமத்தில் பல்லக்கில் எழுந்தருளிச் செல்வதும், காலையில் பல்லக்கிலெழுந்தருளி வருவதும் அறவே நின்றுவிட்டன. குருக்களுடைய கைகளி லெழுந்தருளிப் போய் வருகின்றார். பள்ளியறைப்பல்லக்கு நீண்டகாலமாக வைத்தவிடத்திலேயே அசையாமலிருக்கின்றது. சம்பா, புளியோதரை, ததியோதனம், குழித்தளிகை' நிவேதனமாகின்றன. மார்கழித் திருப்பள்ளிஎழுச்சிக்கு 'ததியோதனம்' நிவேதனஞ்செய்யப்பட்டது. சிவபெருமானுக்குப் பொங்கலில் பிரியமில்லை போலும். சூரிய உதயாஸ்தமனகாலங்களில் 'சங்குநாதமும், தம்பட்டம் என்னும் நகரா ஒலியும்' அர்த்தயாமத்தில் 'திருச்சின்னத் தொனியும், செயகண்டி ஒலியும்' சுவாமி புறப்பாடாகுங் காலங்களில் 'உடல்வாத்திய ஒலியும்' முழங்குவது வழக்கம். இந்த ஐந்துவகை வாத்தியங்களும் இப்போது இல்லவேயில்லை. திருநாவுக்கரசு நாயனர் தேவாரத்திருத்தாண்டகத்தில் 'விருப்போடு வெண்சங்க மூதாவூரும்' காடு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் காலை மாலைகளில் சங்கு தம்பட்டத்தொனிகள் அவசியமென்பது

நன்கு விளங்கும். இருக்குவேத பாராயணம், அபரபக்கஞ் சதுர்த்தசிச் சந்திரன் போலவும், மழைவிட்டபின்பு செடியி னின்றுவிழுஞ் சிறு துளி போலவும் நடக்கிறது. எசுர்வேத பாராயணம், பூர்வபக்கஞ் சந்திரனைப் போலவும், சத்தமேக வருஷிப்புப்போலவும் நடக்கிறது. சாமவேத பாராயணம், 'சதராடைக் கைத்தொழிலியக்கம், சுயமரியாதைச் சுதந்தர வியக்கம், தொல்லுலகச் சுயராச்சிய வியக்கம்' என்பவற்றோடு இடையிடையே கலந்து நடக்கிறது. தேவாரத்திருப்பதிகப் பாராயணம், சீருஞ்சிறப்பும் பொருந்த, பக்திசிரத்தையோடு வழுவின்றி நடக்கிறது.

சிறு திருவிழாக்கள்.

வருஷப்பிறப்பு என்னும் சித்திரை மாசப் பிறப்பாகிய சித்திரைவிஷு புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, சித்திரைத் திருவோணம் சபாநாயகப்பெருமான் அபிஷேக தெரிசனம், சித்திரைப் பூரணை சண்முகக்கடவுள் அபிஷேக அலங்கார தரிசனம்; வைகாசிமாசப் பிறப்பாகிய விஷ்ணுபதி புண்ணிய காலம் துருவாச தீர்த்தத் திருவிழா, வைகாசி விசாகம் சண்முகக்கடவுள் அபிஷேகாலங்கார தரிசனம், சந்திரசேகரப்பெருமான் வீரசேகர ஞானதேசிக மாமுனி வருக்குக் காட்சி கொடுத்தல்; ஆனிமாசப் பிறப்பாகிய ஷடசீதி புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, ஆனி உத்தரத் திருமஞ்சனம் சபாநாயகப்பெருமான் அபிஷேக அலங்காரதரிசன துருவாச தீர்த்தத்திருவிழா, ஆடிமாசப் பிறப்பாகிய தட்சணாயன புண்ணியகாலம் துருவாச தீர்த்தத் திருவிழா, ஆடிப்பூரம் தேவியார் திருவிழா; ஆவணிமாசப் பிறப்பாகிய விஷ்ணுபதி புண்ணியகாலம் துருவாச தீர்த்தத் திருவிழா, ஆவணி பூர்வபக்கஞ் சதுர்த்தியாகிய விநாயக சதுர்த்தி விநாயகர் திருவிழா, ஆவணி மூலம் சோமசுந்தரக் கடவுள் பிட்டுத்திருவிழா, ஆவணி பூர்வபக்கஞ் சதுர்த்தசி சபாநாயகப்பெருமான் அபிஷேகாலங்கார தரிசனம்; புரட்டாசிமாசப் பிறப்பாகிய ஷடசீதி புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, புரட்டாசி பூர்வபக்கப் பிரதமை

முதல், தசமியாகிய விசயதசமி இறுதியாக நவராத்திரிப் பத்து நாள் திருவிழா, புரட்டாசி பூர்வபக்கச் சதுர்த்தசி சபாநாயகப்பெருமான் அபிஷேகாலங்கார தரிசனம்; அரை வருஷப்பிறப்பு என்னும் ஐப்பசி மாசப் பிறப்பாகிய ஐப்பசி விஷு புண்ணியகாலம் துருவாச தீர்த்தத்திருவிழா, ஐப்பசி பூர்வபக்கம் பிரதமை முதல் சஷ்டி யிறுதியாக ஆறுநாள் சண்முகக்கடவுள் சூரபன்மாதியரைச் சம்மாரஞ்செய்த திருவிழா, ஏழாநாள் சண்முகக்கடவுள் தெய்வயானை திருக் கலியாணம்; கார்த்திகை மாசப் பிறப்பாகிய விஷ்ணுபதி புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகள் துருவாசதீர்த்தம் திருஞானதீர்த்தம் திருவிழா, கார்த்திகைச் சோமவாரங்கள் மத்தியானத்தில் துருவாசதீர்த்தத் திருவிழா, இராத்திரியில் அபிஷேக அலங்காரம், தீபாலங்காரம், கார்த்திகைத் திருக்கார்த்திகை அபிஷேகாலங்காரம், தீபாலங்காரம், சொக்கப்பானைக் கொளுத்துந் திருவிழா; மார்கழி மாசப் பிறப்பாகிய ஷடசீதி புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, மார்கழி முதல்தேதி முதல் முப்பதாந்தேதி வரையில் திருப்பள்ளி யெழுச்சி "பொங்கல்" நிவேதனம், மார்கழிப் பூர்வபக்கஞ் சஷ்டியுஞ் சதயமுங்கூடிய தினத்தில் சண்முகக்கடவுள் அறுமுகத்தாலும் பஞ்சாக்கரத்தை இருபத்தைந்து விதம் துருவாசராதி முனிவர்களுக்கு உபதேசஞ்செய்த திருவிழா, மார்கழிப் பூர்வபக்கஞ் சதய முதல் திருவாதிரை வரையில் சபாநாயகப்பெருமான் சந்நிதியில் மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவை யோதல், திருவாதிரையில் சபாநாயகப் பெருமான் அபிஷேகாலங்கார தரிசனம், துருவாசதீர்த்தத் திருவிழா, தேவியார் திருவூடல் சுந்தரமூர்த்தி நாயனார் சமா தானம்; தைமாசப் பிறப்பாகிய உத்தராயண புண்ணியகாலம் மகர சங்கராந்தி புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, தைப்பூசம் பொன்னுகொண்டாநதி தீர்த்தத் திருவிழா; மாசிமாசப் பிறப்பாகிய விஷ்ணுபதி புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, மாசி முதல்தேதி முதல் முப்பதாந்தேதி வரையில் பிரதிதினமும் சூரிய உதயத்தில்

உருத்திரதீர்த்தத் திருவிழா மிக்க விசேஷம், மாசிப்பரணி திருஞானதீர்த்தத் திருவிழா, மாசி அபரபக்கஞ் சதுர்த்தசி மகாசிவராத்திரி நான்கு யாமமும் அபிஷேகாலங்காரம், மாசி பூர்வபக்கஞ் சதுர்த்தசி சபாநாயகப்பெருமான் அபிஷேக அலங்கார தரிசனம், மாசிப் பூரணை சபாநாயகப்பெருமான் ஆனந்தத்தாண்டவ தரிசனம்; பங்குனி மாசப் பிறப்பாகிய ஷடசீதி புண்ணியகாலம் துருவாசதீர்த்தத் திருவிழா, பங்குனி உத்தரம் பிரமதீர்த்தத் திருவிழா, தைமாசம் ஞாயிற்றுக்கிழமையும், அமாவாசையும், திருவோணமும், வியதீபாதமுங் கூடுங்காலமாகிய அர்த்தோதய புண்ணிய காலம் துருவாசதீர்த்தத் திருவிழா; தைமாசம் திங்கட்கிழமையும், அமாவாசையும், திருவோணமும், வியதீபாதமுங் கூடுங்காலமாகிய மகோதய புண்ணியகாலம் துருவாச தீர்த்தத் திருவிழா, சூரியகிரகணம் சந்திரகிரகணம் என்னும் கிரகண புண்ணியகாலங்களில் துருவாசதீர்த்தத் திருவிழா; வைகாசி அமாவாசை புண்ணியகாலம் உருத்திர தீர்த்தத் திருவிழா; மாசி அமாவாசை புண்ணியகாலம் திருஞானதீர்த்தத் திருவிழா; மற்றைய பத்து அமாவாசை புண்ணியகாலங்களில் துருவாசதீர்த்தத் திருவிழா, கார்த்திகை நட்சத்திரந்தோறும் சுப்பிரமணியக்கடவுளை மயில்வாகனத்தில் எழுந்தருளச்செய்தல், பிரதோஷந்தோறும் பிரதோஷநாதரை இடபவாகனத்தில் எழுந்தருளப்பண்ணல், வெள்ளிக்கிழமை தோறும் தேவியாரை எழுந்தருளச்செய்தல் என்னும் சில்லரை உற்சவங்கள் சரிவர நடைபெறவில்லை. சிற்சில உற்சவங்கள் சொற்பத் திட்டத்தில் பல ஏழைச்சனங்களால் நடத்தப்படுகின்றன.

பெருந்திருவிழா.

பிரமோற்சவம் என்னும் பெருந்திருவிழா துருவாச முனிவரால் சித்திரை மாசம் பூர்வபக்கம் மிருகசிர நட்சத்திரத்தில் கொடியேற்றமும், சித்திரை நட்சத்திரத்தில் தீர்த்தமுமாகப் பத்து நாள் சைத்திரோற்சவம் நடத்தியதாக தலபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. வீரசேகர மாமுனிவர், தாம் சித்திரை மாசத்தில் கும்பாபிஷேகஞ்

செய்வித்ததைக் கருதியும், வைகாசி மாசம் விசாக நட்சத்திரத்தில் **சிவசாரூபம்** பெறுங்காலம் நெருங்கியதை நன்குணர்ந்தும், வைகாசி மாசம் பூர்வபக்கம் புனர்பூச நட்சத்திரத்தில் இடபக்கொடி யேற்றி வைசாகோற்சவம் நடத்து நாளில், ஒன்பதாநாள் மகாரதங்கள் நிலைக்கு வராமல், பத்தாநாள் விசாகத்தன்று, சோமசுந்தரப்பெருமான் எழுந்தருளியிருந்த பெரிய மகாரதம், தெற்குவீதியில் பிரமதீர்த்தக் கரையில், சபாநாயகப்பெருமான் சந்நிதிக்கெதிரில் போகும் போது **மகாதேவா** வெனப் பன்முறை புகன்று சிவசாரூபம் பெற்றனர். மறுவருஷம் பிரமோற்சவம் துருவாசமுனிவர் நடத்தியபடி நடத்துகிறதா அல்லது வீரசேகர மாமுனிவர் நடத்தியபடி நடத்துகிறதா என்று சந்தேகம் ஏற்பட்டு தேவியார் சந்நிதியில் புஷ்பங் கட்டிவைத்து உத்தரவுகேட்க, துருவாசமுனிவர் நடத்தியபடியே நடத்தும்படி உத்தரவாயிற்று. அன்று முதல் சித்திரை மாசம் பூர்வபக்கம் மிருகசிர நட்சத்திரத்தில் "கொடியேற்றி அன்று பவளக்கால் விமானங்கள், இரண்டாநாள் சூரியப்பிரபை சந்திரப்பிரபைகள், மூன்றாநாள் பூதன் பூதகிகள், நான்காநாள் நந்தி அன்னங்கள், ஐந்தாநாள் மூஷிகம் மயில், தெருவடைத்த சப்பரத்தில் வெள்ளியிடபங்கள், ஆறாநாள் கற்பக விருட்சம் காமதேனுகள், ஏழாநாள் (திருக்கல்யாணம்) யானை புஷ்பப்பல்லக்குகள், எட்டாநாள் கைலாசபர்வதம் குதிரைகள், ஒன்பதாநாள் மகாரதங்கள், பத்தாநாள் பெருச்சாளி மயில் இடபங்கள், தீர்த்தம் கொடியிறக்கல் பிராயச்சித்தாபிஷேகம், பதினொராநாள் விடாயாத்தி" என்னும் சைத்திரோற்சவம் நடைபெற்று வருகின்றன; எனினும் இவ்வுற்சவம் சுக்கில வருஷம் நடைபெறவில்லை. முதல் நாள் கொடியேற்று விழாவுக்கு மண்டகப்படி யேற்படவில்லை; சிவத்துவசமாகிய விடைக்கொடியேற்றுவிழா மண்டகப்படி செய்விப்போர், உலகினை வென்று செயக்கொடி நாட்டிய பேரரசர் அடையும் பெரும்பேற்றை யடைவர்; இம்மண்டகப்படிக்கு ரூ. 100க்கு அதிகஞ் செலவிடவேண்டியதில்லை. இரண்டாநாள் சூரியப்பிரபை சந்திரப்பிரபை விழாவுக்கும் மண்டகப்படி

ஏற்படவில்லை; இம்மண்டகப்படிக்கு ரூ. 100 செலவு செய்வோர், சிவ திருவுருவம் எட்டினுள் இரண்டாகிய சூரிய சந்திரர்களைப்போலப் புகழிலும் புண்ணியத்திலும் பிரகாசிப்பர். மூன்றாநாள் பூதன் பூதகி விழா, காடுவாகுடி ஸ்ரீ சிவாச நாயக்கரவர்களால் ரூ. 30 செலவிட்டு நடத்தப் படுகிறது; சிறப்பாக நடத்திப்பார்க்க வேண்டுமானால் ரூ. 100 செலவிடவேண்டும்; இம்மண்டகப்படிக்கு ரூ. 100 செல விட்டுச் சிறப்பாக நடத்துவோர் சிவபூதங்கள் என்னும் சிவ கணங்களுக்குத் தலைமைவகிக்கும் பெரும்பேற்றை யடைவர். நான்காநாள் நந்தி அன்ன விழா, எசுர்வேத பாடசாலை தரும கர்த்தா ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்கள் ரூ. 250 செல விட்டுச் சீருஞ்சிறப்பும் பொருந்த, பக்தி ததும்ப, மிக்க பேரன்போடு நடத்துகிறார்; இம்மண்டகப்படி நடத்துவோர் நந்திகேசுர பதமடைவர். ஐந்தாநாள் இடபவாகனக் காட்சி விழா, ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளாலும், அவருக்குப் பிறகு ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிக சுவாமி களாலும், அவருக்குப்பின் ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகளாலும் பரம்பரையாக ரூ. 250 செலவிட்டுப் பக்தி சிரத்தையோடு நடத்தப்பட்டு வருகின்றன; இம்மண்டகப்படி நடத்துவோர் சிவசாரூபபதம் பெறுவர். ஆறாநாள் கற்பக விருட்சம் காமதேனு விழா, குருபூசை மடத்துத் தரும கர்த்தாக்கள் பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியா ரவர்கள், முத்து. அரு. சா. அரு. சோமசுந்தர செட்டியா ரவர்கள் தாயாராகிய சீதைஆய்ச்சி அவர்கள் என்பவர்கள் ரூ. 250 செலவிட்டு பேரன்போடு நடத்துகின்றார்கள்; இம்மண்டகப்படி நடத்துவோர் தேவேந்திரபத மடைவர். எழாநாள் திருக்கல்யாணம் யானைவாகனம் புஷ்பபல்லக்கு விழா, பட்டுக்கோட்டை ஆ. பழ. நா. வ. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் ரூ. 350 செலவிட்டு மிக்க பக்தியோடு நடத்து கின்றார்; இம்மண்டகப்படி நடத்துவோர் சுந்தரமூர்த்தி நாயனாரைப்போல யானைமேலேறித் திருக்கயிலாயஞ் சென்று சிவபெருமானுக்குச் சமீபத்தில் வீற்றிருப்பர். எட்டாநாள்

கைலாசபர்வதம் குதிரைவாகனவிழா, பசுமடம் திருநந்தன வனம் தருமகர்த்தாக்கள், ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள், ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியா ரவர்கள் என்பவர்கள் ரூ. 250 செலவிட்டு மகா பக்தி சிரத்தை யோடு நடத்துகின்றார்கள்; இம்மண்டகப்படி நடத்துவோர் திருக்கைலையில் வீற்றிருப்பர். ஒன்பதாநாள் மகா ரதவிழா, இருக்குவேத பாடசாலை தருமகர்த்தா பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் அன்பும் பக்தியும் பொருந்த சிரத்தையோடு நடத்தினார்; அவருக்குப் பிறகு அவருடைய சுவிகார குமாரராகிய பழ. வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியார் நிறுத்திவிட்டார்; பஞ்சமூர்த்திகளையும், மகா ரதங்களில் எழுந்தருளச்செய்தல், மகாரதங்கள் நிலைக்கு வந்த பின் பஞ்சமூர்த்திகளையும் கோவிலுக் கெழுந்தருளச் செய்தல், மகாரதங்களில் பஞ்சமூர்த்திகளுக்கும் நிவேதனந் தீபாராதனைகள் செய்வித்தல் முதலியவற்றிற்காக ரூ. 100 செலவாகும்; இம்மண்டகப்படி செய்வோர் மகாரதத்திலேறித் திருக்கைலாய மடைவர். பத்தாநாள் தீர்த்தம் கொடியிறக்கு விழாவுக்கு மண்டகப்படி ஏற்பட வில்லை; மூஷிகம், மயில், வெள்ளியிடபம், மற்றொரு வெள்ளியிடபம், பவளக்கால்விமானம் என்பவற்றில் பஞ்சமூர்த்திகளையும் எழுந்தருளப்பண்ணித் துருவாச தீர்த்த விழாவும், கொடியிறக்கு விழாவும் செய்வதற்கு ரூ. 100 செலவிட்டால் வெகு சிறப்பாகச் செய்யலாம்; இந்த மண்டகப்படி செய்வோர் உலகிலுள்ள கங்காநதி முதலிய எல்லாத்தீர்த்தங்களிலும் மூழ்கிய பலனை வெகு எளிதிலடைவர். பதினொராநாள் விடாயாத்தி சரசுவதி மால்விழா, குசதாங்கி கோ. இராமாமிர்தத் தேவர் அவர்கள் க. கோபாலகிருஷ்ணத் தேவர் அவர்கள் என்பவர்கள் ரூ. 50 செலவிட்டுச் சிறந்த பக்தியும், நிறைந்த அன்பும் பொருந்த வெகு சிரத்தையோடு செய்து வருகின்றார்கள். இம்மண்டகப்படி செய்வோர் எல்லாப்பேற்றையும் எளிதி லடைவர். உற்சவத்திற்கு வரவழைக்கும் மேளத்திற்கு ரூ. 400-ம், தாசிக்கு ரூ. 100-ம் கொடுக்கின்றார்கள்;

எளிய கோவிலானதால் மிகையான செலவேயாகும்; ஒரு கோவிலுக்குப் பொட்டுக்கட்டிய தாசி, மற்றொரு கோவிலில் முறைசெய்யக் கூடாதென்று ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. உற்சவத்திற்கும், தினப்படி நடக்கும் சோடச உபசாரத்திற்கும், அர்த்த யாமத்தில் பள்ளியறைக்கு ஊசல் பாடுவதற்கும் ஒரு தாசி வேண்டுமென்று ஆகமத்திற் கூறப்பட்டிருக்கிறது. தாசி யிருப்பது விரோதமென்று நினைப்போர், யானைக்குக் கோவணங் கட்டுவோரே யாவர்.

வாகனங்களின் நிலைமை.

கோவிலில் இருக்கிற வாகனங்களுக்குப் போட்டு மூடியிருந்த உறைகளெல்லாங் கிழிந்துபோய்ப் பரிதாபநிலையிலிருக்கின்றன. வெள்ளிக்காளைக ளிரண்டும் கைகாரப் பேர் வழியால் காயடிக்கப்பட்டு புடுக்குக ளிருந்த விடந்தெரியாமற் போய்விட்டன; இனிப் பொலிகாளைகளுக்குப் பிரயோசனப் படமாட்டா; இக்காளைகளின் எட்டுப் பதக்கங்களையும், இரண்டு மணிகளையும், யாரோ அவனுடைய காளைகளுக்கு அலங்காரஞ் செய்துபார்க்க அவிழ்த்துக்கொண்டு போய் விட்டான். சின்னக்காளையின் நெற்றிப்பட்டத்தையும், அவன்தான் அவிழ்த்துக் கொண்டுபோய் வைத்திருக்க வேண்டும்; அவனை இக்காளைகள் பாயாமல் விட்டதும், முதலாளி இதுவரையில் கவனிக்காதிருப்பதும் ஆச்சரியமே. வெள்ளிக்காளைகளானதால் வீரங்கொண்டு பாயவில்லை என்று நினைக்கவேண்டியிருக்கிறது. சின்னக்காளை கொஞ்சம் சாந்தமானது, பெரியகாளை அப்படியல்ல, கொஞ்சங் கொடுமையுடையதுதான்; ஆனால் இடும்பாவனம் கும்பாபிஷேகத்தில் இடது தொடையில் ஏற்பட்ட காயமும், எழிலூர் கும்பாபிஷேகத்தில் இடதுகாதில் ஏற்பட்ட காயமும், இன்னும் குணமாகா திருத்தலினால் சும்மா இருந்திருக்குமென்று நினைக்கவேண்டியிருக்கிறது. மேற்படி காயங்களில் இதுவரையில் காக்கை கொத்தாதிருப்பது கடவுள் செயல்தான். ஊமைக்காயமாக விருத்தலினால் காக்கை கொத்தவில்லை போலும். மயிலுக்கு கோட்டூர் கும்பாபிஷேகத்தில்

கழுத்திலும் இடது காலிலும் ஏற்பட்ட காயங்களில் கழுத்துக் காயத்தை வைத்தியன் ரூ. 12 வாங்கிக்கொண்டு ஆற்றி விட்டான்; காலிலுள்ள காயம் இன்னும் ஆறவில்லை; ஒரு சமயம் கால் நொண்டியாய்ப் போய்விடுமோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

மகாரதங்கள்.

மகாரதங்களின் சாரதிகள் இராசிநாமா கொடுத்து விட்டார்கள். துவாரபாலகர்களை, சம்பளம் கேட்டதற்காக முதலாளிகள் விலக்கிவிட்டார்கள். குதிரைகள், குதிரை வலிப்பென்னும் நோயினால் இறந்துபோய் விட்டன. இடபங்களை மாடு பிடிக்கும் திருடர்கள் கொண்டுபோய் விட்டார்கள். மயில்கள் பறந்துவிட்டன. பெருச்சாளிகளை குறவர்கள் கொன்று தின்றுவிட்டார்கள். யாளங்களைச் சரபங்கள் சாப்பிட்டுவிட்டன. மணிகளெல்லாம் பேரீச்சம்பழமாயின. படுதாக்களெல்லாம் பொடிப்பொடியாயின. மேற்படி இரதங்களின் சில பகுதிகளைச் "சூரியன், சந்திரன், வருணன், வாயு" என்பவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். இஃது என்ன அநியாயம், அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

கோவிலின் தற்கால நிலைமை.

உலகத்தில் பஞ்ச அறிவோடு, பகுத்தறியும் அறிவையு முடைய மனிதர்களாய்த் தோன்றி யிருப்பவர்களில், சிறு பகுதியோர் சுயநன்மையைக் கருதி, அன்னிய மதத்தினர்களுக்குச் சார்பாய் கோடாரிக்காம்பு போன்றவர்களாய், திருக்கோயில்களை இடித்துப் பள்ளிக்கூடங் கட்டவேண்டுமென்று பத்திரிகைகளில் எழுதும் சிற்றறிவு உடையோர்களைப் போலவும், "படிப்பது வேதாந்தம் இடிப்பது சிவன் கோவில்" என்னும் பழமொழிக் கிலக்காக "திருக்கடிக்குளம், திருச்சிற்றேமம்" என்னும் தேவாரத்திருப்பதிகங்கள் பெற்ற சிவதலங்களையும், "திருக்களந்தை, ஆதித்தேச்சுரம்"

என்னும் திருவிசைப்பாத் திருப்பதிகம்பெற்ற சிவதலத்தையும் இடித்துப் போட்டவர்களைப்போலவும், இராசகோபுரத்தை இடிக்க "ஆல், அரசு, அத்தி, இத்தி, நுணா" என்னும் பஞ்சபாதபப் பக்திமான்களும்; "தென்மதில், மேலமதில், வடமதில்" என்னும் மும்மதில்களையும்; "தெற்குவீதி, மேலவீதி, வடக்குவீதி" என்னும் மூன்று வீதிகளையும் இடிப்பதற்கு, பிரமதீர்த்தம் (சிந்தாமணி), உருத்திரதீர்த்தம் (தாமரைக்குளம்), திருஞானதீர்த்தம் (ஞானதீர்த்தம்) என்னும் மூன்று மகா தீர்த்தங்களும்; கோவிலுக்குள் சலதாரைகளை இடிப்பதற்கு கோவிலுக்குள் புல்மேயும் அந்தணர்களுடைய மாடுகளும் தோன்றியிருக்கின்றன. இவற்றிற்கு உதவிசெய்யும் பஞ்சாயத்தார்களும், மெய்காவற்காரனும், இப்பஞ்சாயத்தார்களை நியமிக்கும் கமிட்டியாரவர்களும் நீடூழி வாழ்வார்களாக. மேற்படி மூன்று குளங்களும் ஒன்றோடொன்று சம்பந்தமுடையனவாய் "மனிதர், மாடு, ஆடு" என்பவற்றின் மலசலசத்துக்கள் நிரம்பப்பெற்றனவாய், "ஆகாயத்தாமரை" என்னும் பூடுக்கு விருத்தியைக் கொடுப்பனவாய், தொத்து நோய்களையுடையனவாய் இருக்கின்றன. பிரமதீர்த்தம் "தெற்குமதில், தெற்குவீதி" என்பவற்றினிடையில் இரண்டுக்கும் சம்பந்தமுடையதாய்ச் சிறிதாயிருக்கிறது. உருத்திரதீர்த்தம் "மேலமதில், தெற்குவீதி, மேலவீதி, வடக்குவீதி என்பவற்றோடு சம்பந்தப்பட்டு மிகப் பெரிதாயிருக்கிறது. திருஞானதீர்த்தம் "வடக்குமதில், வடக்குவீதி" என்பவற்றோடு சம்பந்தப்பட்டு மிகச் சிறிதாயிருக்கிறது. உருத்திரதீர்த்தத்தை மத்தியில் சதுரித்து வெட்டிச் சுற்றிலும் தூர்த்தும், "பிரமதீர்த்தம், திருஞானதீர்த்தம்" என்பவற்றைப் பூராவாகத் தூர்த்தும், புன்செய்களாகச் செய்யாத பட்சத்தில், "வாகனமண்டபம், விறகுவாடி, திருக்குளந் தென்கரைக்கட்டிடம், தேர்முட்டிகளுக்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள கட்டிடங்கள், மருதவனம்வீடு" என்பன மழையொழுக்கினல் இடிந்து போனதுபோல மேற்படி மதில்கள் சலப்பெருக்குத் தாக்குதலினல் விரைவில்

இடிந்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. இராசகோபுரம் வடபுறம் மத்தியில் பூர்வபக்கஞ் சந்திரனைப்போல நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து விர்த்தியாகும் விருட்சம், விரைவில் கோபுரத்தை வீழ்த்திவிடுமென்பதிற் சந்தேகமில்லை. தேர்முட்டிகளைச் சுற்றிலுமுள்ள விடங்களெல்லாம் மனிதர்கள் மலசலங் கழிக்கும் கக்கூசுகளாகிவிட்டன. தேர்முட்டிகளுக்கும், தேர்களுக்கும் இடையில் உள்ள இடங்கள், சனங்கள் மறைவாகவிருந்து மலசலங் கழிப்பதற்கு வசதியாயிருக்கின்றன. வீதிகளில் சில வீடுகள் வீதிகளைக் கைப்பற்றுகின்றன. இவற்றையெல்லாங் கவனிக்கக்கூடியவர்கள் இல்லையாயினும், சுவாமி சந்நிதிக்கெதிரில், சுவாமி தேருக்கும், சுப்பிரமணியர் தேருக்கும் நடுவில் மணற்குன்று அமைத்து, அதனைச்சுற்றிலும் மூங்கில் முள்வேலி வைப்பதற்கும்; திருக்குளம் கீழப்படித்துறைச் சுவரின் கீழ்புறம் மழைச்சலம் தங்கும்படி அறுப்புக்குழி வெட்டி அச்சுவரைச் சாய்த்து வைத்திருப்பது போல, சுவாமி யம்மன் தேர்முட்டிகள் சாய்வதற்கு ஏற்றதாய், அத்தேர்முட்டிகளி னிடையில் மழைச்சலம் தங்கும்படி அறுப்புக்குழி வெட்டி வைப்பதற்கும்; இடிந்து விழுந்த கட்டிடங்களின் மரங்களை அள்ளிக்கொண்டுபோய் போட்டுக்கொண்டு, கோவிலுக்குச் சம்பந்தமில்லாமல் அமைக்கும் ஓட்டுக்கொட்டகை முதலியவற்றிற்கு உபயோகப்படுத்துவதற்கும்; குமாரமங்கலம் கிராமத்திலிருந்த பனைமரங்களை வெட்டி எடுத்துக் கொள்ளுவதற்கும் ஒருவரும் இல்லாமற் போகவில்லை.

நஷ்டம்.

1918-ம்-ஆண்டு முதல் 1931-ம்-ஆண்டு வரையில் கோவிலில் சரியான கணக்குக ளிருந்ததாகவாவது, அக்கணக்குகளைத் தேவஸ்தானம் இன்ஸ்பெக்டர்கள் கவனித்ததாகவாவது தெரியவில்லை. இருக்குவேத பாடசாலை தருமகர்த்தாவாகிய பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் கோவில் விசாரணையை ஒப்புக்கொண்டிருந்த காலத்தில்,

நெற்கலம் 3000-ம் சேர்க்கட்டி வைத்திருந்தார். கோபாலசாமி முதலியாரவர்கள் பலாத்காரமாக மேற்படி நெல்லுடன் கோவிலைக் கைப்பற்றிக்கொண்டார். மேற்படி கோபாலசாமி முதலியார் அவர்களும், சோமசுந்தர முதலியார் அவர்களும் கோவிலைக் கவனித்து விசாரணைபண்ணாத காரணத்தினால், (1) "பசுமடம் திருநந்தனவனம், இருக்குவேத பாடசாலை, எசுர்வேத பாடசாலை, சாமவேத பாராயணம், குருபூசை மடம் வகையரு, விபூதி மடம்" என்பவற்றின் கீழ் நிலங்களாகிய கோவிற் புன்செய் நிலங்களுக்காகப் பரிவர்த்தனை செய்திருந்த நன்செய் நிலங்களும், விளக்குடித் தென்னந் தோப்பைக் கருப்பநாடானிடங் கொடுத்துத் திருக்களரில் பரிவர்த்தனை செய்திருந்த நன்செய் நிலமும் வியாச்சியத்தில் முன் பாத்தியக்காரர்கள் ஏலம் எடுத்துக்கொண்டு போய் விட்ட வகையில் நஷ்டம் ரூ. 15500; (2) "வாகனமண்டபம், விறகுவாடி, திருக்குளத்துத் தென்கரைக் கட்டிடம், தேர் முட்டிகளுக்குத் தெற்கிலும் வடக்கிலுமுள்ள கட்டிடங்கள், மருதவனங்கிராமத்து வீடு" என்பன மழையொழுக்கினால் இடிந்துபோய் விட்டவகையில் நஷ்டம் ரூ. 30000; (3) "விலை உயர்ந்த ஐந்து படுதாக்கள், விலை உயர்ந்த ஏழு பட்டுப் புடவைகள், பெரியநாகாபரண வெள்ளிக்கவசம், கைத்தீவட்டிகளுக்கு எண்ணெய் ஊற்றுகிற இரண்டு பெரிய வெள்ளிப் புதுவிகள், இரண்டு வெள்ளி இடபங்களினுடைய இரண்டு வெள்ளிப்புடிக்குகள், மேற்படி இடபங்களினுடைய இரண்டு வெள்ளிமணிகள், மேற்படி இடபங்களினுடைய எட்டுப் பதக்கங்கள், சின்ன வெள்ளி இடபத்தினுடைய நெற்றிப் பட்டம்" என்பன காணாமற் போய்விட்ட வகையில் நஷ்டம் ரூ. 5000; (4) "கப்பலடிக்காடு மா ஒன்றுக்கு நெற்கலம் 10 வீதம் விளையக்கூடிய 16 மா நிலத்துக்குப் பதிலாக கீழக்கருப்பன்சேரி மா ஒன்றுக்கு நெற்கலம் 5 வீதம் விளையக்கூடிய 12 மா நிலத்தையும், காரியாந்தோப்படி வண்ணான்குளத்தடி மா ஒன்றுக்கு நெற்கலம் 10 வீதம் விளையக்கூடிய 5மா நிலத்துக்குப்பதிலாக வைக்கோற்போர்க் கட்டளை மா ஒன்றுக்கு நெற்கலம் 5 வீதம் விளையக்கூடிய

5 மா நிலத்தையும்" வாய்மொழியாகப் பரிவர்த்தனை செய்திருக்கிற வகையில், வருஷம் 22-க்கு நெற்கலம் 2750-க்கு கலம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் நஷ்டம் ரூ. 5500; (5) கோவிலுக்கிருந்த இருபது ஏரையும் முப்பது ஏராகப் பத்து ஏர் அதிகப்படுத்தி ஏர் ஒன்றுக்கு ஒரு மா வீதம் மா ஒன்றுக்கு நெற்கலம் 15 வீதம் விளையக்கூடிய இருபோக நன்செயில் 10 மா நிலம் மானியம் கொடுத்திருக்கிற வகையில் வருஷம் 22-க்கு நெற்கலம் 3300-க்கு கலம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் நஷ்டம் ரூ. 6600; (6) பிள்ளையார்தோப்படித் திடலை வெட்டித் தரிசு போட்டதற்கும், அத்தியடியில் நிலம் சேர்க்க வாய்க்காலை நிமிர்த்து வெட்டிச் சும்மா போட்டதற்கும், செலவிட்ட நெற்கலம் 300-க்கு நஷ்டம் ரூ. 600; (7) "நான்கு வீதிகள், காரியாங்தோப்பு, நடுத்திடல், ஒட்டன் திடல், சந்தைவெளித்தோப்பு, நாகன்சுற்றுத்திடல்" முதலிய விடங்களில் வைத்துப் பயிர்செய்த தென்னம் பிள்ளைகளில் கூண்டுகட்டித் தண்ணீர் விட்டுக் காபந்து பண்ணாத காரணத்தினால் பட்டுப்போன தென்னம் பிள்ளைகள் 2000, காய்ப்புக்கு வந்து சாத்துக்குத்தகைக்குக் கொடுத்த காரணத்தினால் பட்டுப்போன தென்னை 25, ஆக 2025-க்கு நஷ்டம் ரூ. 2250; (8) கோபாலசாமி முதலியாரவர்களால் ஏற்பட்ட கடனுக்காக கோவிலுக்கு சப்திக்குவரும் டிக்கிரிகளின் மூலமாக நஷ்டம் ரூ. 3000; ஆக இனம் எட்டுக்குக் கோவிலுக்கு நஷ்டம் ரூ. 68450.

பூசகர், பரிசாரகர், மேளம்.

பூசகர் என்னும் குருக்களிருவரும் கருநிற முடையவர்கள்; சூதாடுவதில் மிக்க விருப்ப முடையவர்கள்; சூதாட்ட முடிவில் கை கால்களைச் சுத்திசெய்து கொண்டு, ஸ்நானஞ் செய்யாமல் கோவிலுக்குட் சென்று பூசை செய்கின்றவர்கள்; தாசியில்லாத கோவிலில் சோடச உபசாரஞ்செய்கின்றவர்கள்; சோடச உபசாரஞ் செய்யும்போது "ஆவாகனம், காசுத்தி" என்பனவின்றிச் செய்கின்றவர்கள்; அதிதூரிக

மாகச் சோடச உபசாரஞ் செய்கின்றவர்கள்; சோடச உபசாரஞ் செய்யும்போது சிவ திருவுருவத்தைப் பாராது தரிசனத்துக்கு வருகின்றவர்களைப் பார்க்கின்றவர்கள்; துரிதமாகச் சோடச உபசாரஞ் செய்யலாமாவென்று கேட்கின்றவர்களுக்கு, காற்றில்லாத காரணத்தினால் வெயர்வை யுண்டாகிறது, அதற்காகத் துரிதமாகச் செய்கின்றோமென்று பதில் சொல்கின்றவர்கள்; தச பதினைந்து நாள் முறையாகப் பூசை செய்கின்றவர்கள்; பூசாகால அருச்சனையைக் கைவிட்டவர்கள்; கலியாணமாகாத பிரமசாரிப் பையன்களைக் கொண்டு சில சமயங்களில் பூசை செய்விக்கின்றவர்கள்; முறையில்லாத காலங்களில் வேறு கோயில்களில் பூசை செய்கின்றவர்கள்; "ஆடு, பன்றி, கோழி" முதலியன பலியிடுங் கோயில்களிலும் பூசை செய்கின்றவர்கள். ஒருவர் கடுங்கோப முடையவர், கட்டுப் படாமல் பேசுபவர், சபா நாயகப்பெருமானுக்கு சாயரட்சை செய்தபின் சிவலிங்கப்பெருமானுக்கு அபிஷேகமும், சிவலிங்கப் பெருமானுக்கு சாயரட்சை செய்தபின் தேவியாருக்கு அபிஷேகமுஞ் செய்விக்கின்றவர். மற்றொருவர், ஆகமத்தில் சகலாகம பண்டிதரைப்போலவும், வைத்தியத்தில் தன்வந்திரியைப்போலவும், சோதியத்தில் எட்சணி முதலிய எல்லாமறிந்த வல்லவரைப்போலவும், மந்திரத்தில் சித்தமகாதி மகா மந்திரங்கற்ற சித்தரைப்போலவும் பேசுவர். இவர், சென்ற பிரசோற்பத்தி வருஷத்தில், ஆவணி மாசம் பூர்வபக்கம் சதுர்த்தியில் செய்யவேண்டிய விநாயக சதுர்த்தி பூசையையும், புரட்டாசி மாசம் பூர்வபக்கம் பிரதமை முதல் தசமி இறுதியாகச் செய்யவேண்டிய தேவியார் நவராத்திரி பூசையையும், "சுருதி, யுக்தி, அனுபவம்" என்னும் மூன்றுக்கும் பொருந்தாத வகையில் ஒரே பட்சத்தில் நடத்தினர். கருநிற முடையவர், சூதாடுவோர், ஈசுர பத்தியில்லாதவர், கோப முடையவர், உறுப்புக்குறைந்தவர், தீராவியாதியுடையோர், வைத்தியஞ்செய்வோர், சோதியஞ்சொல்வோர், மந்திரஞ்செய்வோர், பொறாமையுடையோர், கிரியாலோபமுடையோர், மந்திரலோபமுடையோர், வஞ்ச

மனத்தர், பவியிடுங்கோவில் பூசகர், ஒழுக்கமில்லாதவர், பிரமசாரியர் இவர்கள், சிவ திருவுருவங்களைத் தொட்டுப் பூசைசெய்யக் கூடாதெனவும்; 'தாசியில்லாமலும், ஆவாகனம் கரசுத்தியில்லாமலும்' சோடச உபசாரம் செய்யக்கூடாதெனவும் ஆகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. பூசகர் இருவருக்கும் வருஷம் ஒன்றுக்குச் சம்பளம் ரூ. 210, கட்டளை அருச்சனைகளுக்குத் தட்சிணை ரூ. 30, சில்லரை அருச்சனைகளுக்குத் தட்சிணை ரூ. 10, ஏர்படித்தட்சிணை ரூ. 80, ஆக ரூ. 330. சிவப்பிரசாதத்தை இகழ்ந்து அரிசியாக எடுத்துக்கொண்டு போவது மரக்கால் 365-க்கு கலம் 30 மரக்கால் 5. இந்த மூந்நூற்று முப்பது ரூபாயும், முப்பது கலனே ஐந்து மரக்கால் அரிசியும், பூசகர்கள் அடைவதற்கு அவர்கள் செய்யும் வேலையாவது, காலை மாலைகளில் "சுவாமி, தேவியார், விநாயகர், சுப்பிரமணியர்" என்னும் திருவுருவங்களுக்கும், அர்த்தயாமத்தில் "சுவாமி, தேவியார்" திருவுருவங்களுக்கும், சுவாமி புறப்பாடாகுங் காலங்களில் உற்சவமூர்த்தங்களுக்கும் அபிஷேகம் அலங்காரஞ் செய்தல், நிவேதனாதிகள் செய்தல் என்பனவாம். நாளொன்றுக்கு ஐந்து மணி நேரத்துக்கு மேல் எவ்விதவேலையு மிருப்பதாகத் தெரியவில்லை. இரண்டு பூசகரிருப்பது மிகையேயாகும்.

பரிசாரகர் இருவருள் ஒருவர் கடுங்கோபமும், சிறந்த சிவபக்தியும், நீண்ட அனுபோகமு முடையவர். மற்றொருவர், சிவபக்தி சிறிதுமின்றி, வாயிற் புகையிலையை அடக்கிக்கொண்டு கோவில் வேலைகளெல்லாவற்றையும் பார்ப்பவர்; சிறந்த மந்திரவாதியாகப் பாவனை காட்டுபவர்; படிக்கு எட்டுப் பட்டைக்குக் குறையாமல் போடுபவர். இவர் சமையல் முறையில், சாதத்துக்குள் புகையிலைச்சுருள் இருந்ததாக வதந்தி யுண்டாகிறது; அச் சுருளானது வாயில் இருந்ததோ அல்லது மடியிலிருந்ததோ தெரியவில்லை. இருவரில் ஒருவர் "சந்தனம் அரைத்தல், அபிஷேகத் தீர்த்தங் கட்டல், திருவிளக்கேற்றல், தீபங்கள் கொளுத்திக்

கொடுத்தல் என்பவற்றையும்; மற்றொருவர் "காலையில் ஒரு மரக்கால் அரிசியும், மாலையில் ஒன்றேயரைக்கால் மரக்கால் அரிசியும் பொங்கி நிவேதனங்கொண்டுபோதல், சோடச உபசாரஞ் செய்யும்போது கரசுத்திக்குச் சலங்கொடுத்தல்" என்பவற்றையும், தலா பதினைந்து நாள் முறையாக ஏற்படுத்திக்கொண்டு பார்க்கின்றார்கள். இவர்கள் காலையில் 3 மணி நேரமும், மாலையில் 4 மணி நேரமும் வேலை பார்க்கின்றார்கள் இவர்களுக்கு வருஷம் ஒன்றுக்குச் சம்பளம் ரூ. 336. ஏர் படி அரிசி பொங்குவதற்குச் சம்பளம் ரூ. 50. நித்தியப்படியில் ஏற்பட்ட சாதத்துக்குள்ள அரிசியைப் பொங்காமல் எடுத்துக்கொண்டுபோவது அரிசி மரக்கால் 365-க்கு கலம் 30 மரக்கால் 5 ஆக ரூ. 386 அரிசி கலம் 30 மரக்கால் 5. இவர்களில் ஒருவர் அடுத்த கிராமங்களில் ஏற்படும் கலியாணம் முதலிய விசேஷங்களுக்குச் சமையலுக்குப்போய் மூன்று அல்லது நான்கு நாள் வரையில் தங்கிவிடுகிறார். சில சமயங்களில் ஒரு வாரம் வரையில் தங்குவதுமுண்டு அந்தக் காலங்களில் மேற்கூறிய வேலைகளெல்லாவற்றையும் ஒருவரே பார்க்கின்றார். இதனால் கோவிலில் ஒரு பரிசாரகர் பார்க்கக்கூடிய வேலைகள்தான் இருக்கின்றனவென்பதும், அந்த வேலையை இருவர்கள் பார்க்கின்றார்களென்பதும் நன்கு விளங்குகின்றது. இரண்டு பரிசாரகர்களிருப்பது அதிகமேயாகும்.

மேளம் சதை இரண்டும், தலா பதினைந்து நாள் முறை ஏற்படுத்திக்கொண்டு வாசிக்கின்றார்கள் உற்சவத்தில் அதிகமாக மேளம் வரவழைப்பதால் சாதாரண காலங்களில் இரண்டுசதை மேளமிருப்பது மிகையேயாகும். உள்ளூரிலேயே நன்றாக வாசிக்கத்தக்க "கோவிந்தசாமி நாகசுரர், கண்ணைய நாகசுரர்" என்று இரண்டுசதை மேளங்கள் பிரத்தியேகமாக விருக்கின்றன. இவர்களையே உற்சவத்தில் வாசிக்கச்செய்யும் பட்சத்தில் சொற்பத்தொகை வாங்கிக் கொள்வார்கள். அவர்களுடைய வித்துவத்திறமையும் நன்கு புலப்படும்.

திருட்டு.

சென்ற பிரசோற்பத்தி-வரு மாசி-மீ 23உ (6–3–32) ஞாயிற்றுக்கிழமை காலையில் அமுதவல்லியம்பாளுடைய ரூ. 500 பெறுமானமுள்ள தங்கத்தாலி வகையறாக் கோர்வையைக் கழற்றி, அர்த்தமண்டபத்திலிருந்த பூட்டில்லாத பெட்டியில்வைத்து மூடி, பூட்டில்லாத அர்த்தமண்டபக் கதவைச்சாத்திக்கொண்டு சுப்பிரமணியக் குருக்கள் போனாராம். "சுவாமி அம்மன்" மகா மண்டபங்கள் கட்டைக்கோபுரங்கள் என்பவற்றின் கதவுகளை மெய்காவல் இராமலிங்கம் பூட்டிக்கொண்டு போனானாம். மாலை மூன்றரை மணி சுமாருக்கு பரிசாரகர் கிருஷ்ணய்யர் வந்து பெரிய கோபுரவாயில் குடவரையிற்புகுந்து, மேற்படி மெய்காவல் இராமலிங்கம் வைத்திருந்த திறவுகோல்களைத் தேடி எடுத்துக்கொண்டுபோய் மேற்கண்ட கதவுகளை யெல்லாம் திறந்து வைத்துவிட்டு கெண்டாமணி அடித்தாராம். பின்பு சிறிது நேரங்கழித்து குருக்களைக் கூப்பிட அவருடைய வீட்டிற்குப் போனாராம். போகும்போது வழியில் மெய்காவல் இராமலிங்கத்தைச் சந்தித்தாராம். பின்பு சிறிது நேரங்கழித்து மேற்படி கிருஷ்ணய்யரும் சுப்பிரமணியக் குருக்களும் கோவிலுக்கு வந்தார்களாம். சாயந்திரம் ஐந்தரை மணி சுமாருக்கு மேற்படி சுப்பிரமணியக் குருக்கள் மேற்படி தாலி வகையறாக்கோர்வை வைத்திருந்த திருவாபரணப் பெட்டியைத் திறந்து பார்த்தாராம். பெட்டியில் தாலி வகையறாக்கோர்வையாகிய தங்கத்திருவாபரணங் காணப்படவில்லையாம். மேற்படி சுப்பிரமணியக் குருக்கள், கோவில் மானேசராகிய சுப்பிரமணிய ஐயரிடத்தில் தெரிவித்தாராம். மேற்படி மானேசர், பஞ்சாயத்தாராகிய மேற்படி அழகப்ப செட்டியாரவர்களுக்கு கோட்டையூருக்கு லெட்டர் எழுதினாராம். கோவிலூரிலிருந்து "ஏற்கனவே இந்தக்கோவில் மானேசராயிருந்தவரும், தற்காலம் கோவிலூர் மடத்தில் தாசில் உத்தியோகத்திலிருப்பவரும், மேற்படி பரிசாரகருக்கு நெருங்கிய பந்துவும் மிக்க நண்பருமாகியவரும் ஆகிய கிருஷ்ணய்யரவர்கள் வந்து, மேற்படி

பரிசாரகர்வீட்டில் நாலைந்து நாள் தங்கியிருந்து, அவரோடு கலந்து பேசிக்கொண்டு, அத்திவெட்டிப் பெரியாண்டவர் கோவிலில் குறிப்பிட்டவர்களிடத்தில் சத்தியம் வாங்கும்படி சொல்லிவிட்டுப் போனாராம். ஷ கோவில் மானேசராகிய மேற்படி சுப்பிரமணிய ஐயரவர்கள் உத்தரவுப்படி கோவில் விசாரிப்பு அமிர்தங்கண்டப் பிள்ளை என்பவர் "சுப்பிரமணியக் குருக்கள், பரிசாரகர் கிருஷ்ணய்யர், மெய்காவல் இராமலிங்கம்" என்பவர்களை அத்திவெட்டிக்கு அழைத்துக் கொண்டுபோய் சத்தியம் வாங்கினாராம். சத்தியத்திற்குப் போவதற்கு முன் மேற்படி மெய்காவல்காரனும் மேற்படி பரிசாரகரும் இரண்டு நாள் ஊரில் இல்லையாம். சத்தியத்திற்குப் போயிருந்த சமயத்தில் மேற்படி பரிசாரகருடைய மனைவியார் தண்ணீர்த்துறைக்குச் சென்றிருந்ததாயும், அங்கு தண்ணீர்மொள்ள வந்திருந்த சில பெண் பிள்ளைகள் பரிசாரகருடைய மனைவியாரைப்பார்த்து, ஐயாவும் சத்தியத்திற்குப்போக நேர்ந்துவிட்டதே யென்று பரிதாபப்பட்டதாயும், பரிசாரகருடைய மனைவியார், ஐயாவுக்கு மந்திரம் தெரியும் சத்தியம் எங்களை ஒன்றுஞ் செய்யாது என்று தைரியஞ் சொன்னதாயும் வதந்தி.

அம்பாள் சந்நிதி அர்த்தமண்டபத்தில் திருவாபரணப் பெட்டியிருப்பதும், அப்பெட்டிக்குப் பூட்டில்லாதிருப்பதும், அதற்குள் திருவாபரணம்வைத்து மூடிவைப்பதும், அர்த்தமண்டபம் வாயிற்படிக் கதவுக்குப் பூட்டில்லாதிருப்பதும், அக்கதவுகளைச் சாத்திப் பூட்டிக்கொண்டு வருவது போல் பாவனை பண்ணுவதும், அன்றையதினம் தாலிவகையறாத் தங்கத்திருவாபரணக் கோர்வையை அப்பெட்டிக்குள் வைத்து மூடியதும் குருக்கள் பரிசாரகர்களுக்குத்தான் தெரியும்; வேறு யாருக்குந் தெரிய நியாயமே கிடையாது. மேற்படி பரிசாரகர் கிருஷ்ணய்யர் அன்றையதினம் சமையல் முறையிலுள்ளவர்; மடைப்பள்ளி பெரிய கோபுர வாயிலுக்குத் தென்புறம் உட்பக்கத்திலிருக்கிறது; மடைப்பள்ளிக்குள் கிணறும், மடைப்பள்ளியின் வடபகுதியில்

அரிசி முதலிய சாமான் அறையும், மடைப்பள்ளிக் கெதிரில் விறகுகளு மிருக்கின்றன. மடைப்பள்ளியிற் புகுந்து பொங்கவேண்டிய மேற்படி கிருஷ்ணய்யர் மெய்காவல் இராமலிங்கம் வசமிருக்கவேண்டிய திறவுகோல் களை குடவரையில் தேடி யெடுக்கவும், மெய்காவல்காரன் திறந்துவைக்கவேண்டிய கட்டைக்கோபுரங்கள் மகா மண்டபங்கள் என்பவற்றின் கதவுகளைத் திறந்துவைக்கவும், மெய்காவல்காரன் அடிக்கவேண்டிய கெண்டாமணியை அடிக்கவும், வீட்டிலிருந்த குருக்களைப் போய் அழைத்துக் கொண்டுவரவும் ஏற்பட்ட காரணத்தையும்; திறவுகோல் களைப் பந்தோபஸ்தாக வைத்திருக்கவும், தான் நேரே கதவுகளைத் திறந்துவைத்துக் கெண்டாமணி அடிக்கவும், கடமைப்பட்ட மெய்காவல்காரன் திறவுகோல்களை குடவறை யில் வைக்கவும், மணிச்சத்தங் கேட்டு வந்தவுடன் தான் வைத்திருந்த திறவுகோல்களை மேற்படி கிருஷ்ணய்யர் எடுத்து மேற்படி கதவுகளைத் திறந்து வைத்து கெண்டாமணி அடித்ததைப்பற்றி உடனே மானேஜரிடத்தில் தெரிவிக்கா திருக்கவும், ஏற்பட்ட காரணத்தையும், உற்று நோக்கும் அறிவாளிகளுக்கு மேற்படி மெய்காவல்காரன் திறவுகோல் களைக் குடவறையில் வைத்திருந்ததென்று சொல்வதும், மேற்படி கிருஷ்ணய்யர் திறவுகோல்களைக் குடவறையிலிருந் தெடுத்தேன் என்று சொல்வதும் உண்மையல்ல வென்பதும்; தாலி வகையறாத் திருவாபரணந் திருடியவர் இன்னாரென் பதும், பங்கிட்டுக்கொண்டவர் இருவர் என்பதும் நன்கு விளங்காமற்போகாது. திருட்டுப்போனவுடன் வில்லேஜ் மாஜிஸ்திரேட் துவாராவாக போலீஸாருக்குத் தெரிவித்து இந்தியன் பினல்கோட் 457, 380 என்னும் செக்ஷன்களின் படி நடவடிக்கை நடத்தவேண்டியதிருக்க, அத்திவெட்டி பெரியாண்டவர் கோவிலில் சத்தியம் வாங்கியதை ஆராய் வோருக்கு உண்மை புலப்படாமற்போகாது. "நான் அடிக்கிறாப்போல் அடிக்கிறேன் நீ அழுகிறாப்போல் அழு" என்னும் பழமொழிக்கிலக்காக ஊராரை ஏமாற்றும் பொருட்டு சத்தியம் வாங்கியதென்பது நிச்சயமே.

"சுப்பிரமணியக்குருக்கள், பரிசாரகர் கிருஷ்ணய்யர், மெய்காவல் இராமலிங்கம்" என்பவர்கள் கோவில் உத்தியோகத்திலேயே இருப்பது வெகு அழகாயிருக்கிறது.

குருபூசைமடம் தருமகர்த்தா பாகனேரி பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் (1), பசுமடம் திருநந்தனவனம் தருமகர்த்தாக்கள், காரைக்குடி ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் (2), ஆத. லெ. ஆத. சொக்கலிங்க செட்டியாரவர்கள் (3), எசுர்வேத பாடசாலை தருமகர்த்தா ஆத பழ. சிதம்பர செட்டியாரவர்கள் (4), தேவியார் வெள்ளிக்கவச பக்திமானாகிய களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்கள் (5), இந்த ஐந்துபேர்களையும், சிவதிசைச் சாசுவதப் பஞ்சாயத்தார்களாகவாவது அல்லது மேற்படி பெரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் (1), மேற்படி ராம. ஆத. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் (2), மேற்படி S. இரங்கசாமி முதலியாரவர்கள் (3), இந்த மூன்றுபேர்களையும், சிவதிசைச் சாசுவதப் பஞ்சாயத்தார்களாகவாவது நியமிக்கும் பட்சத்தில் மேற்கண்ட சீர்திருத்தங்களெல்லாவற்றையும் நன்றாகச் சீர்திருத்திக் கோவிலை நல்ல நிலைமையில் வைப்பார்களென்பது திண்ணமே யாகும்.

வீரசேகர ஞானதேசிக மாமுனிவர் இத்தலத்தில் துருவாச முனிவரோடு திருக்கோயில்கொண்டு விளங்குவது கோவில் காரியங்கள் சரிவரநடக்கும் பொருட்டென்பதும், நடக்காதபட்சத்தில் நடக்கும் மார்க்கத்தைத் தேடும் பொருட்டென்பதும், உண்மையே யாகும். அன்றியும் இத்தலத்தை வழிபடுவோர் தம்மைப்போலப் பெரும்பேறடைவர் என்பதையுங் குறிப்பிக்கின்றார்.

ஆண்டவர் திருக்கோயிற் றிருப்பணி.

ஸ்ரீவீரசேகரஞானதேசிக மகாமுனிவர், "திருக்கோயிற் றிருப்பணி செய்வித்தல், மகா கும்பாபிஷேகஞ் செய்வித்தல், திருப்பெருந் திருவிழாச் செய்வித்தல் என்னும் அரிய

பெரிய திருத்தொண்டுகளைத் துருவாசமுனிவரைப்போலச் செய்வித்து, அத்துருவாசமுனிவரைப் போலவே சிவசாரூபம் பெற்றுத் திருக்கோயில்கொண்டு விளங்குவதால் "திருக்களர் ஆண்டவர்" என்னும் திருப்பெயர் பெற்றார். இவ்வாண்டவருடைய திருவுருவத்தைக் கோவிலுக்கு வடகிழக்கில் வடக்கு வீதிக்கு வடபுறத்தில் திருச்சமாதி வைக்கப்பட்டிருக்கிறது. இச்சமாதிக்கு ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் ரூ. 60000, செலவிட்டு கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம்" என்பன அமைத்து மகா கும்பாபிஷேகஞ் செய்வித்து, திருக்களரில் ரூ. 7000-க்கு நிலம் வாங்கிவைத்து, மத்தியானத்தில் மகா நிவேதனமும், சாயரட்சையில் சுண்டல் நிவேதனமுஞ் செய்வித்து வந்தார்கள். மகா நிவேதனாதிகள் தயார் செய்விப்பதற்காகவும், ஆண்டவரைப் பூசிக்குந் திருத்தொண்டர்கள் வசிப்பதற்காகவும், ஆண்டவரைத் தரிசிக்கவருந் திருத்தொண்டர்கள் அமுதுண்டு வசிப்பதற்காகவும் ரூ. 12000 செலவிட்டு கோவில் திருப்பணி நடந்த காலத்தில் ஆண்டவர் சுமாராக அமைத்திருந்த திருமடத்தின் பெரும்பகுதிகளைப் பிறித்துப் பெரிதாக்கினார்கள். இத்தலத்துக்கு வரும் நகரவணிகக் கனதனவான்கள் தங்குவதற்காக நகரவிடுதி கட்டுவதற்கு ரூ. 5000 செலவிட்டார்கள். ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் ரூ. 60000 செலவிட்டு மேற்படி சமாதிக்கோவிலுக்கு "திருமதில், பிரகாரமண்டபம், இராசகோபுரம்" முதலியன அமைத்து இரண்டாந்தரம் மகா கும்பாபிஷேகஞ் செய்வித்தார்கள். மேற்படி நகர விடுதிக்காக ரூ. 5000 செலவிட்டுக் கட்டி முடித்து வைத்திருக்கிறார்கள். திருக்களரில் ரூ. 6000க்கு நிலம் வாங்கி வைத்திருக்கிறார்கள். காரைக்குடி முத்துப்பட்டிணம் ராம. கு. மாணிக்க செட்டியார் என்கிற மாணிக்க ஐயா அவர்களும், அவருடைய அருந்தவச் சகோதரியாராகிய சிவப்பாய்ச்சி அவர்களும் ஆண்டவர் சிவசாரூபம்பெற்ற தெற்குவீதியில் வீதிக்கு வடபுறம் பிரமதீர்த்தம் மேல்கரையில் சபாநாயகப்பெருமான்

திருச்சந்நிதிக்கெதிரில் ரூ. 3200 செலவிட்டு முத்திமண்டபங் கட்டிவைத்து ரூ. 500 செலவிட்டு செம்பில் ஆண்டவருடைய திருவுருவம் அமைத்து, அம்மகாமூர்த்தியை எழுந்தருளப் பண்ணுவதற்காக ரூ. 3000 செலவிட்டு வெள்ளி விமானஞ் செய்துவைத்து, அம்மூர்த்தி பூசைக்காக ரூ. 800-க்கு திருக்களரில் நிலம் வாங்கிவைத்து, பண்டு ரூ 2500-வைத்து ஆண்டவர் மகாரதத்திற் சிவசாரூபம் பெற்றதற் கறிகுறியாக மகாரதத்தன்று முத்திக்காட்சி உற்சவம் நடத்துகின்றார்கள். ஒக்கூர் சி. கரு. சி. கரு. ஆதப்ப செட்டியாரவர்கள் ஆண்டவருக்கு உச்சிக்காலத்தில் பொங்கல் நிவேதனஞ்செய்ய வேண்டியதற்காக ரூ. 6700-க்கு திருக்களரில் நிலம்வாங்கி வைத்திருக்கிறார். பள்ளத்தூர் சு. சு. சித. சிதம்பர செட்டியாரவர்கள் ஆண்டவர் பூசைக்காக ரூ. 6000 செலவிட்டு நிலம் வாங்கி, திருமதிலெடுத்து, திருநந்தனவனம் ஏற்படுத்தி, வருஷம் ஒன்றுக்கு அசாமி சம்பளத்துக்காக ரூ. 132 கொடுத்துவந்தார். அவருக்குப் பிறகு அவருடைய குமாரராகிய சு. சு. சித. அழகப்ப செட்டியாரவர்கள் கொடுத்து நடத்திவருகின்றார். காரைக்குடி சா. நா. அ. அழ. அருணாசல செட்டியாரவர்கள் ஆண்டவருக்கு உச்சிக்காலத்தில் சர்க்கரைப் பொங்கல் நிவேதனஞ் செய்யவேண்டியதற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 365 கொடுத்து வருகின்றார். காரைக்குடி அரு. அ. அரு. இராமசாமி செட்டியாரவர்கள் ஆண்டவருக்கு சாயரட்சையில் பால் நிவேதனஞ்செய்ய வேண்டியதற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 30 கொடுத்து வருகின்றார். இருக்குவேத பாடசாலை தருமகர்த்தாவின் மனைவியாராகிய பழ. வெ. ராம. இலட்சுமி ஆய்ச்சி அவர்கள் சாயரட்சையில் ஆண்டவருக்கு சுண்டல் நிவேதனஞ்செய்ய வேண்டியதற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 18 கொடுத்து வருகின்றார். குடக்கட்டளை, தசாங்கக்கட்டளை, பன்னீர்க் கட்டளை, அகண்டதீபக்கட்டளை, திருவிளக்குக்கட்டளை, மாசக் குருபூசைக்கட்டளை, வருஷக் குருபூசைக்கட்டளை, மகா சிவராத்திரிக்கட்டளை முதலியன வைத்திருப்பவர்களின் விலாசம் முதலிய விபரங்கள் நன்கு புலப்படவில்லை.

பரிவர்த்தனை நிலங்களெல்லாம் பறி முதலாயிற்று. கட்டிடங்களெல்லாங் குட்டிச்சுவராயிற்று. மதில்களெல்லா மல்லாந்து விழப்போகின்றன. விருட்சங்களெல்லாங் கோபுரத்தில் விருத்தியாகின்றன. தீர்த்தங்களெல்லாந் திராவியாதிக்குச் சிறப்புச்செய்கின்றன. வீதிகளை வீடுகள் விழுங்குகின்றன. உட்துறை உருக்குலைந்திருக்கின்றன. சோடச உபசாரம் சோடச அபசாரமாகின்றன. தேவியார் தாலியைத் திருடன் கொண்டுபோனான். காளைகள் புடிக்குகளைக் கள்வன் கொண்டுபோனான். மாடுகளின் மணிகளை மடையன் கொண்டுபோனான். ஐந்து வாத்தியங்கள் சந்தியிற் போயிற்று. கோவிலில் திருடர்கள் குடியிருக்கலாயிற்று. வெள்ளிப்புதுலிகள் வெளியிற்போயிற்று. நாகாபரணம் நாசமாயிற்று. சில்லைத்திருவிழாச் சொல்லாமற்போயிற்று.

குறிப்பு

ஸ்ரீமத் மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் ஐந்து பவுனுக்கு திருமங்கலியஞ் செய்து அமுதவல்லியம்பாளுக்கு சாந்தியிருக்கின்றார்கள்.

திருச்சிற்றம்பலம்

திருக்களர் விளக்கம் முற்றிற்று.

…நிதி (பில்டிங்ஸ்) பிரஸ்,
விஜயபுரம் 33 gps

Q23:58.2182
N83
178328

நல்லோர் விரும்பும்

ஞானக் களஞ்சியம்!

இல்லறத்தாருக்கும்

துறவறத்தாருக்கும்

ஏற்ற புஸ்தகம் இது ஒன்றே!

இதற்கிணையான வசன நூலை

நீங்கள் பார்த்திருக்கவே

மாட்டீர்கள்! இந்நூலை வாசிக்க

கொடுத்துவைக்காதவர்கள்

வாஸ்தவத்தில்

துர்ப்பாக்கியர்களே!

தன்னையறியும் ஆத்ம ஞான இரஹசியங்கள் நிறைந்த இனிய செந்தமிழ் வசனநூல் இது வொன்றேயாகும். ஏராளமான அப்பியாசப் படங்களுடன் 600 பக்கம் கிளேஸ் காகிதம் பட்டு காலிக்கோ பைண்டு புத்தகம் விலை ரூ **3.**

M. A. நாவலர் அண்டு சன்ஸ்,

விஜயபுரம்—தஞ்சாவூர் ஜில்லா.